Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-28 | 13-12-2004 | திங்கட்கிழமை | ஓசை -299

கணேசா நகையுகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10932)



## நிலாவெளி அரசியல்துறை அலுவலகத்தை தீவைத்து எரிக்க பேரினவாதிகள் முயற்சி!

### கடற்படையினர் உடந்தை என சந்தேகம்

(திருகோணமலை)

**நிலாவெளியில் உள்ள விடுதலைப்புலிகளின் பிரதேச அரசியல்துறைச் செயலகத்தை மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோல் ஊற்றி எரிப்பதற்கு பேரின வாதிகளால் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்திற்கு அருகில் முகாமமைத்துள்ள கடற்படையினரின் தொடர்பிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்று ஞாயிறு அதிகாலை 3.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் பிரதேச அரசியல் பணி மனை, அவ்வளவில் ஓலையால் அமைக்கப்பட்டுள்ள கொட்டகை ஆகியவற்றை மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோல் ஊற்றி எரிப்பதற்கு, முட்கம்பி வேலியால் உட்புகுந்தவர்கள் முயற்சித்தனர் என்று நிலாவெளி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தூயவன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். பணிமனைக்குள் உறக்கத்திலிருந்த உதவியாளர் ஒருவர் உள்ளே பெற்றோல் மணம் வீசுவதை உணர்ந்து திடீரென்று எழும்பி கதவைத் திறந்தபோது, அலுவலக வளவினுள் நின்ற சிலர் சில தடயப் பொருட்களை அந்த இடத்தில் போட்டுவிட்டு பாய்ந்து ஓடினர் என்றும் செய்தியாளர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

அருகில் நிலை கொண்டிருக்கும் கடற்படை முகாமைச் சேர்ந்த படையினர் தான் இவ்விஷமத்தனத்தில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று அபிப்ராயப்படுவதாகவும், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தூயவன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதாகவும் தூயவன் மேலும் தெரிவித்தார்.

அலுவலகத்தை எரிக்க முற்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் படையினர், விடுதலைப்புலிகள் அலுவலக வளவில் கைவிட்டுச் சென்ற துணிகள், கைக்கடிகாரம் மற்றும் பொருட்களை தூயவன் செய்தியாளர்களுக்குக் காட்டி


(12ஆம் பக்கம் பார்க்க)

## ஹொங்ஹொங்கிற்கு ரணில் விஜயம்

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஹொங் ஹொங் சென்றுள்ளார். அவர் பின்னர் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் செல்லவுள்ளார். எதிர்வரும் 21ஆம் திகதி நாடு திரும்பும் அவர் அதன் பின்னர் எதிர்வரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் மறவனுக்கு பெருமளவு மக்கள் அஞ்சலி



லெப். கேணல் மறவன் அவர்களின் வித்துடல் நேற்று இவரது சொந்த இடமாகிய வடமராட்சி கிழக்கில் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டது. இதன் போது பெரு

(12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு உலங்குவானூர்திச் சேவை நடத்துவதில்லை

### சிறிலங்கா விமானப் படை முடிவு

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கோ அல்லது வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு இடையிலோ புலிகளின் பிரதிநிதிகளுக்கான போக்குவரத்துச் சேவையை இனி மேற்கொள்வதில்லையென்று பாதுகாப்பமைச்சுடன் இணைந்து நடத்திய ஆலோசனையின் பின்னர் விமானப்படை தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நோர்வே அனுசரணையாளர்கள் மற்றும் இராஜதந்திரிகளையும் இனிமேல் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அண்மையில் உள்ள சிறிலங்கா

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் அரசியலமைப்புச் சீர்திருத்தம் சனவரி நடுப்பகுதியில் சமர்ப்பிக்க முயற்சி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதிர்வரும் சனவரி மாதம் நடுப்பகுதியில் அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முயற்சி செய்வதாக தகவல் அறிந்த தரப்புக்கள் தெரிவித்துள்ளன. இதன்படி நடைமுறை நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறை மாற்றப்பட்டு அதற்கு பதிலாக பாரராளுமன்றத்திற்கு பதில் சொல்லக்கூடிய பிரதமர் நிலைய்யை ஏற்படுத்துவதே நோக்கமாகும். எனினும் இதற்கு தமது எதிர்ப்பை வெளியிட்டு வரும் ஐக்கிய தேசிய கட்சி உட்பட்ட எதிர்க்கட்சிகள் இது சனநாயக விரோதச் செயல் என கண்டித்துள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

□ லெப். கேணல் மறவன் (எலியாஸ்ப்பிள்ளை - ஸ்ரனிலோஸ்)

(12ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்பு




லெப். கேணல் மறவன் அவர்களின் திருவுருவப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு குண்டு வீச்சு தாக்குதலுக்கு ஐ.தே.க., ஹெல உறுமயவுக்கு தொடர்பு

### பொலிசார் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இசை நிகழ்ச்சியின் போது குண்டுத்தாக்குதல் மேற்கொண்டவர்களுக்கும், கோட்டை பிரதேசத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதி ஒருவருக்குமிடையில் நெருங்கிய தொடர்பிருப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது.

இதேவேளை ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்களான போமல்தே சோபித தேரர், அத்துரலிய ரத்தினதேரர் ஆகியோர் இத்தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட நபர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இக் குண்டு வீச்சில் தருணய சிங்களப் பத்திரிகைப் படப்பிடிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இரு தமிழர்கள் உட்பட மூவர் கடற்படையால் கைது

சிறிலங்கா கடற்படை தலைமையகத்தை அண்மித்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் வாகனமொன்றில் பயணம் செய்ததாக இரண்டு தமிழர்கள் உட்பட மூவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டனர். இவர்கள் பயணம் செய்த வாகனம் வழி தவறி கடற்படைப் பகுதிக்குள் நுழைந்துள்ளது. இதனால் மூவரையும் சிறிலங்கா இராணுவம் கைது செய்துள்ளது. காரைநகரைச் சேர்ந்த சிவபாலன் சிவகரன், நெல்லியடியைச் சேர்ந்த ரி.சசிகாந்தன் ஆகியோருடன் வாகன சாரதியான மட்டக்குளியைச் சேர்ந்த கே.ஜி. அனுருத்தகுமார் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள். இவர்கள் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (32)

## மேடையிலிருந்த கலைஞர்களை குறிவைத்தே குண்டுவீசப்பட்டது

### இலங்கை – இந்திய உறவைப் பாதிக்கலாம்

கொழும்பு குதிரை பந்தயத்திடலில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் கலைஞர்களை குறிவைத்தே நடத்தப்பட்டதாக ஆரம்பக்கட்ட விசாரணைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் அது குறிதவறி மேடைக்கு முன்னால் வீழ்ந்து வெடித்துள்ளது. இதன்போது இருவர் பலியானதுடன், மேலும் 25 பேர் வரை காயமடைந்துள்ளனர். இவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடம் என கொழும்பு தேசிய வைத்தியசாலை தரப்புகள் தெரிவித்துள்ளன. இந்திய பிரபல திரை நடிகரான

(12ஆம் பக்கப் பார்க்க)

## வாழைச்சேனையில் குண்டுவெடிப்பு

மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்று முன்தினம் இரண்டு குண்டு வீச்சு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் எவருக்கும் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை. முதல் குண்டு வீச்சு சம்பவம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ஓட்டமாவடியில் உள்ள யுனெஸ்கோ நிறுவனத்தில் பணியாற்றும் கல்வி அதிகாரியின் வீடு சேத

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. வெதுப்பகம் ஒன்றின் மீது இரண்டாவது தடவை குண்டு வீச்சு

### காசாளர் காயமடைந்தார்

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல வெதுப்பகம் ஒன்றின் மீது நேற்று இரவு 7.00 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இந்தக் கைக்குண்டு உள்ளே வீழ்ந்து வெடித்துச் சிதறியதில் காசாளரான சந்திரகுமார் இராஜன் (வயது - 24) என்பவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த வெதுப்பகம் மீது இம் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது கைக்குண்டு வீச்சு சம்பவம் இதுவாகும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தவறிவிட்டது

500-9487 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் புத்தகம், கா/தி அட்டை, வரி அட்டை அத்துடன் அடங்கிய சில ஆவணங்கள் நேற்று (12.12.2004) ஆனந்தபுரத்திற்கும் டிப்போச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. எடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். (5350)



## தவறிவிட்டது

32/2 மூன்றாம் குறுக்கு தெரு நாவாந்துறை யாழ்ப்பாணத்தை நிரந்தர முகவரியாகவும் படகுதுறை இலுப்பக்கடவை மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை நேசநாயகம் என்பவரின் தேசிய அடையாள அட்டை நேற்று (12.12.2004) கிளி.உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (11027)


# குப்பி விளக்கிலிருந்து தீப்பற்றி பெண் ஒருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

குப்பிவிளக்கை அணைக்காது உறங்கிய குடும்பப் பெண் அது தவறுதலாக வீழ்ந்து பற்றியதால் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்றிரவு 8.10 மணிக்கு கிளிநொச்சி 4 ஆம் வாய்க்கால் மருதநகர் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்று மாலை 8.00 மணியளவில் உறங்கச் செல்கின்ற போது குப்பி விளக்கையும் அருகில் வைத்து விட்டு அதனை அணைக்க மறந்து போய் உறங்கிய சமயம் குப்பி விளக்கு தவறுதலாக தட்டுப்பட்டு வீழ்ந்தது. இதனால் நுளம்பு வலையில் தீப்பற்றிக் கொண்டது. நுளம்பு வலையில் தீப்பற்றிய வேளை திடீரென எழுந்த பிரபாகரன் சத்தியவாணி (வயது-18) என்பவர் அதனை அணைக்க முற்பட்ட வேளை கைகளிலும், கால்களிலும் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகியுள்ளார். இந்நிலையில் உறவினர்கள் சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நேற்றிரவு 8.40 மணிக்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (லோ,தீ)

# -மாவீரர் நாளையொட்டி மன்னார் மாவட்டத்தில்- ஆசிரியர் மாணவரிடையே நடத்தப்பட்ட கருத்தோவியப்போட்டி முடிவுகள் வெளியாகின

தமிழீழ மாவீரர் நாளையொட்டி தமிழீழ கல்விக்கழகத்தினால் மன்னார் மாவட்டத்தில் மாணவர், ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்ட கருத்தோவியப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு நடைபெற்ற போட்டியில் திருமதி. வசந்தி சுவந்தாக்குருஸ் மன் /கருங்கண்டல் றோ.க.ம.வி. 1ஆம் இடம்,திருமதி. ஜெ.சுரஞ்சினி, பெல்சியா மன்/பெரியபண்டிவிரிச்சான் ம.வி. 2ஆம் இடம்,அ.அமிர்தநாதன் மன்/கள்ளியடி அ.த.க.பாடசாலை 3ஆம் இடம்,

மாணவர் மட்டத்தில் கல்வி வலய ரீதியில் மடு கல்விவலயம் வே.திசுபா 9ஆம் தரம் மன்/வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை 1ஆம் இடம்,சகாயநாதன் அபர்னா ஸ்ரெல்லா 11ஆம் தரம் மன்/பெரியபண்டிவிரிச்சான் ம.வி. 2ஆம் இடம்,கந்தசாமி தங்கேஸ்வரி, 10ஆம் தரம் மன்/பெரியபண்டி விரிச்சான் ம.வி. 3ஆம் இடம், மன்னார் கல்விவலய மட்டம் செல்வன். பிறசித் மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி 1ஆம் இடம்,செல்வி. என்.குளோடியா மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி 2ஆம் இடம்,செல்வி. எஸ் வினோபா மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி 3ஆம் இடம்.

# க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான நில அளவைச் செயல்முறைக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான புவியியல் பாட நில அளவைச் செயல்முறைக் கருத்தரங்கு கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இன்றும், நாளையும் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ள மேற்படி நில அளவை செயல்முறைக்கருத்தரங்கில் கிளி/ திருவையாறு,கிளி/ வட்டக்கச்சி, கிளி/ இராமநாதபுரம்,கிளி/ முருகானந்தா,கிளி/ தருமபுரம், கிளி/ பிரமந்தனாறு,கிளி/ கண்டா வளை, கிளி/ பரந்தன். இந்து மகா வித்தியாலயத்தில் குறித்த பாடத்தை கற்கும் மாணவர்களை பங்குபற்றுமாறு கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம் வேண்டியுள்ளார் (சோ,சு)


# VACANCIES

UNIVERSITY OF JAFFNA, SRILANKA

Further to our advertisement dated 09.10.2004 for the following post

1.professor/associate professor in law

2. Senior Lecturer Grade I/Senior Lecturer Grade 11 Lecturer (Probationary) in Law

Closing date of the applications have been extended for the post of the Professor up to 14.01.2004 and other post up to 14.01.2005 and other posts up to 20.12.2004

VICE-CHANCELLOR
UNIVERSITY OF JAFFNA,
JAFFNA,
2004.12.03

(11028)


# ஆரம்பக் கல்வியை நிறைவு செய்த முன்பள்ளிச் சிறார்கள் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு ஒஸ்கார் சின்னப் பூக்கள் முன்பள்ளியில் ஆரம்பக் கல்வியை நிறைவு செய்த முன்பள்ளிச் சிறார்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு





நேற்று புதுக்குடியிருப்பில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

நேற்றுக் காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு-முல்லை வீதியில் இருந்து ஆரம்பக் கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் அனைவரும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றப்பட்டது. அடுத்து தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றினார். முன்பள்ளிக் கொடியை செல்வி. யசோதா ஏற்றினார். இதனை அடுத்து ஆரம்பக் கல்வியை நிறைவு செய்து வெளியேறும் முன்பள்ளிச் சிறார்களை பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த வைத்தியகலாநிதி எழுமதி கரிகாலன் கௌரவித்தார். இந்நிகழ்வு முன்பள்ளி நிர்வாக ஆசிரியர் எஸ்.வசந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் பாடசாலை ஆசிரியர்களான திருமதி கவிதா, திருமதி. நிஷாந்தினி உட்பட முன்பள்ளிச் சிறார்கள் பெற்றோர், பொதுமக்கள் என நூற்றுக்கும் அதிக மானவர்கள் கலந்து கொண்டனர். (லோ.தீ)

# நமுனங் குளத்திட்ட அறிமுக விழா நிகழ்வு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் நிறுவன அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடைமுறைப்படுத்தப்படும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் நமுனங் குளத்திட்ட அறிமுக விழா கடந்த 10ஆம் திகதி பிற்பகல் 2.45 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்டத்திற்கான மாவட்ட திட்ட இணைப்பாளர் அ.நிதர்சன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் மங்கல விளக்கினை முல்லை. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகொட் திட்ட மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் ரகுநாதப்பிள்ளை, துணுக்காய் பிரதேச செயலர் ந.நந்தகுமார் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகப் பணிப்பாளர் வின்சன் நமுனங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் யோகநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஏற்றி வைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழக கொடியினை மல்லாவி வலயத் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி ஏற்றி வைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து பெயர்ப்பலகையினை துணுக்காய் பிரதேச செயலர் திரை நீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து கட்டடத்திற்கான நாடாவினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் பணிப்பாளர் சுடர் ஐயா நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். இத் திட்டம் தொடர்பான விளக்கவுரையினை சுடர் ஐயா பிரதேச செயலர் நந்தகுமார் நிகொட் திட்ட மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர், முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் அமிர்தாப் மூர்த்தி ஆகியோர் உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து பயனாளிகளிற்கு பயன் தரும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. (24)

# வட்டக்கண்டல் அ.த.க பாடசாலையில் சிறப்புற நடந்த ஒளி விழா நிகழ்வு

மன்னார் மாவட்டத்திலுள்ள மன்/ வட்டக்கண்டல் அ.த.க பாடசாலையில் ஒளிவிழா நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி பாடசாலை அரங்கில் மிக சிறப்பாக நடை பெற்றது. மாணவரது கலை நிகழ்வுகள் பலவும் நடைபெற்றதுடன் பாடசாலை மட்டத்தில் கடந்த காலத்தில் இடம் பெற்ற பரீட்சைகள், பல்வேறு போட்டிகளில் பாட சாலை வலயமாவட்ட மட்ட நிகழ் வில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

## விபத்தில் காயம்

மன்னாரில் நேற்று இடம் பெற்ற வீதிவிபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் மன்னாரிலுள்ள மக்கள் வங்கிக்கு முன்னால் உள்ள வீதியில் சென்றுகொண்டிருந்த எல்ப் வாகனம் கட்டுப்பாட்டை மீறி வீதியில் சென்று கொண்டிருந்த மன்னார் பிரதேசசபை மேற்பார்வையாளர் மீது மோதியதில் அவர் காயமடைந்தார். இவர் தற்போது அநுராதபுர வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். வாகனமும், சாரதியும் பொலிசார் தடுத்து வைத்துள்ளனர்.


# புத்தக கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தால் நவம்பர் 22முதல் 30 வரை நடாத்தப்பட்டுக்கொண்டிருந்த மேற்படி கண்காட்சியும் விற்பனையும் டிசம்பர் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வன்னிவாழ் மக்களும், பொது நிறுவனங்களும் பயன் பெறும் வண்ணம் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அனைத்து வகையான தமிழ், ஆங்கில புத்தகங்களும் உள்நாட்டு வெளியீடுகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

சிறிலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 021-2222573

(5358)



# சாவு அறிவித்தல்

## அமரர் முத்துவேலு மாணிக்கம்

அராலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 56,கனகபுரம்,கிளிநொச்சியை தற்காலிக வசிப்பிடமாகக்கொண்டவருமான முத்துவேலு மாணிக்கம் 12.12.2004ஆம் திகதி காலமானார். இவர் காலஞ்சென்ற முத்துவேலு வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த மகனும்,காலஞ்சென்ற சரவணமுத்து பார்வதி தம்பதிகளின் மருமகனும்,காலஞ்சென்ற நடராசா பஞ்சரத்தினம் (முன்னாள் சந்தை மேற்பார்வையாளர் கிளி.பிரதேசசபை), சீவரத்தினம் (கனகபுரம்) ஆகியோரின் சகோதரனும் கலைதேவி (யாழ்ப்பாணம்), கலைச்செல்வன் (ஜேர்மனி), கலைரதி (நீர்கொழும்பு), கலைஜீவன்(மாவீரர்),கலைவாணி (ஜேர்மனி), கலைமாறன்(லண்டன்),கலைச்செல்வி(ஜேர்மனி), கலைவாணன் (கனகபுரம்), கலைநிதி (பிரான்ஸ்), கலைமகள்(கனகபுரம்),கலைஅமுதா(கரைச்சி பிரதேசசபை,கிளி) ஆகியோரின் பெரிய தந்தையும்,சிவஞானசுந்தரம்பிள்ளை(யாழ் இந்துக் கல்லூரி), பத்மாதேவி (ஜேர்மனி), ஆறுமுகதாசன் (லண்டன்),கோகுலசிங்கம் (ஜேர்மனி),புளோரினா (லண்டன்),சந்திரகுமார் (ஜேர்மனி), யோகேஸ்வரி (கச்சேரி,கிளிநொச்சி), சிவராசன்(பிரான்ஸ்),கண்ணன் (பாரவூர்திச்சங்கம்,கிளி),ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13.12.2004 திங்கட் கிழமை) பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
மு.சீவரத்தினம்.

(4950)

# டார்பன் பகுதியில் வன்முறையை நிறுத்துமாறு அரசு,தீவிரவாதிகளிடம் ஆபி. யூனியன் கோரிக்கை

(டார்பன்)

**சூடானில் டார்பன் பகுதியில் வன்முறைகளை நிறுத்துமாறும் இல்லையேல் சமாதான நடவடிக்கையில் ஆபிரிக்க யூனியன் பங்குபற்றுவதை மீளாய்வு செய்யவேண்டி ஏற்படும் என ஆபிரிக்க யூனியன் சூடான் அரசிற்கும் தீவிரவாதிகளுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

சூடானின் டார்பன் பிரதேசத்தில் சமாதானத்தை ஏற்படுத்தவென ஆபிரிக்க யூனியன் நாடுகளின் பிரதிநிதிகள் நைஜீரியாவின் தலைநகரான அபுஜாவில் நேற்று முன்தினம் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன.

ஆபிரிக்க யூனியன் தலைவர் சாம்ஜபொக் உரைநிகழ்த்துகையில் இரண்டு வருட காலம் நீடித்து வரும் டார்பர் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லையென்று குறிப்பிட்டார். ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சூடான் அரசாங்கமும் கிளர்ச்சிவாதிகளும் மீறியுள்ளனரென்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இதன் காரணமாக இம்மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் இரு தரப்பினரும் டார்பன் பிரச்சினை சம் பந்தமாக உடன்பாட்டிற்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார். அதிகாரப்பகிர்வு சொத்துக்கள் பகிர்வு, பாதுகாப்பு, புனர்வாழ்வு, புனரமைப்பு என்பன சம்பந்தமாக உடன்பாடு காணப்பட வேண்டும் என்றும் அவர் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

இரு தரப்பினராலும் வன்செயல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமானால் இத்தகைய பேச்சுக்களில் ஆபிரிக்க நாடுகள் பங்குபற்றுவதையிட்டு மீளாய்வு செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# ஐ.நா.ஊழியர்களைக் கடத்திய தீவிரவாதி பாகிஸ்தானில் கைது

(இஸ்லாமாபாத்)

ஆப்கானிஸ்தானில் கடந்த ஒக்டோபர் மாதம் ஐ.நா ஊழியர்கள் மூன்று பேரைக் கடத்திய ஜெய்ஸ்-அல் முஸ்லிம் தீவிரவாத அமைப்புத் தலைவர் சயத் அக்பர் ஆகாவை பாகிஸ்தான் பொலிசார் அண்மையில் கைது செய்தனர். இத்தகவலை பாகிஸ்தான் செய்தித்துறை அமைச்சர் ஷேட் ரஷீர் அகமது நிருபர்களிடம் சனிக்கிழமை தெரிவித்தார்.



வட ஈராக் நகரான மொசூலில் எரிகின்ற வான் ஒன்றின் பின்னால் ஆயுததாரி ஒருவர்.


# மியன்மார் இராணுவ அரசு மேலும் 5 ஆயிரம் கைதிகளை விடுதலை செய்கிறது

(மியன்மார்)

மியன்மார் அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள மேலும் 5 ஆயிரம் கைதிகளை விடுதலை செய்ய ஆரம்பித்துள்ளதாக மியன்மாரின் இராணுவ அரசாங்கம் அறிவித்துள்ளது.

மொத்தமாக 14 ஆயிரம் சிறைக்கைதிகளை விடுதலை செய்யும் நடவடிக்கைகள் சென்ற மாதம் ஆரம்பித்தன.

இராணுவ ஆட்சியாளர்கள் தகவல் தருகையில் உளவறியும் பிரிவின் தவறு காரணமாகவே ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டார்கள் என்றும் அவர்களை விடுவிப்பதே அதன் கடமையென்றும் தெரிவித்துள்ளனர். இதே சமயத்தில் விடுதலை செய்யப்பட்ட கைதிகளில் அரசியல் கைதிகள் உள்ளனரா என்பது பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.



பலூஜாவில் சோதனைச்சாவடியிலிருந்து தீவிரவாதிகளின் நடமாட்டத்தை அவதானிக்கும் படையினர்.

# பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் முப்பது ஈராக்கியர்கள் கைது

(பாக்தாத்)

ஈராக்கில் பொலிஸ் நிலையம் மீது நடந்த தாக்குதலையடுத்து சந்தேகத்தின் பேரில் 30 பேரை ஈராக் பொலிசார் கைது செய்தனர். தாக்குதல் சம்பவத்திற்கும் அவர்களிற்கும் தொடர்பு உள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஈராக் தேசியப் படையின் தலைமையகம் மீது வியாழக்கிழமை அதிகாலை தீவிரவாதிகள் திடீர்த் தாக்குதல் நடத்தினர். ஈராக் பொலிசாரும் திருப்பித் தாக்கினர். சுமார் 20 நிமிடம் இந்தச் சண்டை நீடித்தது. இதில் யாருக்கும் காயமில்லை.

# 16 வயது சிறுவனைக் கொலை செய்த அமெரிக்க வீரருக்கு 3 ஆண்டு சிறை

(பாக்தாத்)

ஈராக்கில் 16 வயதுச் சிறுவனை கொலை செய்த குற்றத்திற்காக அமெரிக்க வீரர் ஒருவருக்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வடக்கு கரோலினாவில் உள்ள வின்ஸ்டன்-சலிம் பகுதியைச் சேர்ந்தவர் ஜானி ஹோர்னே இராணுவ வீரரான இவர் ஈராக்கில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார். போர்ட் ரிலி என்ற பகுதியில் உள்ள 41 ஆவது தரைப் படைப் பிரிவில் முதல் பட்டாலியனில் வேலை செய்து வருகிறார்.

கடந்த ஓகஸ்ட் 18 ஆம் திகதி பாக்தாத்தில் உள்ள சதார்சிட்டி பகுதியில் ஈராக் தீவிரவாதிகளுடன் கடும் சண்டை நடந்தது. அப்போது எரிந்து கொண்டிருந்த ஒரு பாரஊர்தியில் 16 வயதுச் சிறுவன் ஒருவன் கடுமையான காயங்களுடன் போராடிக்கொண்டிருந்தான். அவனை இராணுவ வீரர் ஜானி ஹோர்னே கொன்று விட்டதாகவும், இந்த செயலில் மற்றொரு வீரரை உட்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. கடந்த சில மாதங்களில் இது போன்று கொலைச் செயல்களில் ஈடுபட்டதாக அமெரிக்க வீரர்கள் ஆறு பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வெனிசுவெலா இராணுவ விமானம் மலையுடன் மோதி 16 பேர் உயிரிழப்பு

(கராகஸ்)

வெனிசுவெலா நாட்டில் இராணுவ விமானம் ஒன்று மலை மீது மோதி விபத்துக்குள்ளானதில் 16 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

வெனிசுவெலா நாட்டின் தெற்குப பகுதியில் அமைந்த நகரமான புயட்டோ அயாச்சோவிலிருந்து கராகஸ் நகரில் இருக்கும் கர்லோட்டா இராணுவப் படை விமான நிலையத்திற்கு இராணுவ விமானம் நேற்று முன்தினம் சென்று கொண்டிருந்தது. கராகஸ் நகரின் மேற்குப் பகுதியில் சென்று கொண்டிருந்த போது அங்குள்ள மலையில் விமானம் மோதி நொருங்கியது. இந்த விபத்தில் வெனிசுலா நாட்டின் தேசிய பாதுகாப்புப் படை இன்ஸ்பெக்டர் ஜெனரல் மற்றும் உயரதிகாரிகள் உட்பட 16 பேர் பலியாகினர்.

கடந்த இரண்டு மாதமாக வெனிசுவெலாவில் கடுமையான புயல் வீசி வருகிறது. அந்தப் புயலில் சிக்கிய பல சிறிய விமானங்கள் விபத்துக்குள்ளாகின. கடந்த ஆகஸ்ட் மாதமும் இராணுவ விமானம் ஒன்றும் புயலில் சிக்கியதில் 25 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில் இருந்து இங்கிலாந்தை வந்தடைந்துள்ள 200 இங்கிலாந்துப் படையினர்களில் ஒருவர் தனது குடும்பத்தாருடன் காணப்படுகிறார்.

# மனிதஉரிமைகளைக்காப்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறதென்கிறார் சனாதிபதி புஷ்

(வோஷிங்டன்)

உலகின் எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் அடிப்படை உரிமைகளுடன் வாழ வேண்டும், தனி மனித கண்ணியம் காக்கப்பட வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறது. என்று அதிபர் ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.

மனித உரிமைகள் தினத்தையொட்டி வோஷிங்டனில் வெள்ளிக்கிழமை அவர் நிகழ்த்திய உரையில் இதைக் கூறியிருக்கிறார். சுதந்திரமும் கண்ணியமும் கடவுள் கொடுத்த கொடை. சுதந்திரமான வெளிப்படையான சமுதாயங்கள் ஏற்படுவதை அமெரிக்கா ஆதரிக்கிறது. மியான்மரில் (பர்மா) ஆங்சான் சூகியியை விடுதலை செய்ய வேண்டும் சனநாயகம் அங்கு மீண்டும் மலர உதவ வேண்டும் என்று ஆளும் அரசுக்கு அறிவுறுத்தியிருக்கிறோம்.

சூடானில் மக்கள் படும் துயரங்கள் முடிவுக்கு வர வேண்டும் என்பதில் அக்கறையாக இருக்கிறோம். வடகொரியாவில் அரசின் கொடுமையான அடக்குமுறைகளுக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு உதவி செய்ய விரும்புகிறோம். பெலாரஸ், கியூபா, ஈரான், சிம்பாப்வே ஆகியநாடுகளில் சனநாயக உரிமைகளுக்காக போராடும் மக்களுக்கு நமது ஆதரவு உண்டு.

விபச்சாரத்துக்காக இளம் பெண்களையும், குழந்தைகளையும் கடத்துவதைத் தடுப்பதில் அமெரிக்கா அக்கறை செலுத்துகிறது.சுதந்திரமான தேர்தல், சுதந்திரமான சந்தை, பேச்சு சுதந்திரம், மனித உரிமைகளைக் காப்பது ஆகியவற்றை உலகின் பல நாடுகளிலும் மேற்கொள்ள அதிக நிதியை ஒதுக்கியிருக்கிறோம் என்றார் புஷ்.

# தாய்வான் நாட்டில் பாராளுமன்றத் தேர்தல்

(தாய்பே)

தாய்வான் நாட்டில் பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று முன்தினம் அமைதியாக நடைபெற்றது.மொத்தம் உள்ள 225 தொகுதிகளில் 176 தொகுதிகளில் நேரடி தேர்தல் நடைபெறுகிறது.

இந்த 176 தொகுதிகளிலும் மொத்தம் 386 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இவர்களில் 116 பேர் சுயேச்சைகள் ஆவர்.

பள்ளிக்கூடங்கள், கோவில்களில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு வாக்குப்பதிவு நடை பெற்றது. தனி சுதந்திர நாடுகோரும் சென்ஷியூவின்கட்சிக்கும், தேசியவாத கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. சுமார் 2 கோடியே 30 இலட்சம் வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

**அரசியல் யாப்பில் திருத்தம்**

ஐவரிக்கோஷ்டில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள சனாதிபதித்தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் அல்சேனும் போட்டியிட வழிசெய்யும் விதத்தில் அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டுவரப்படும் என்று அந் நாட்டு சனாதிபதி லோரன்ட்ஸ் அறிவித்துள்ளார்.

- வடக்கு-கிழக்கு சுகாதார திணைக்களத்திற்கு -

# ஒதுக்கப்பட்ட ஒரு பகுதி வாகனங்களை வேறு திணைக்களங்களுக்கு மாற்றத் திட்டம்

(திருமலை)

**வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார திணைக்கள பயன்பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களில் ஒரு பகுதியை வழங்கு வதற்கு மாகாண சபை பின்னடித்து வருவதுடன் இவற்றை வேறுதிணைக்களங் களுக்கு மாற்றவும் திட்டமிடப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.**

வடக்கு- கிழக்கு சுகாதார திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் இது வரை வழங் கப்படாத்து குறித்து வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவ நாதன் கிஷோர் வடக்கு-கிழக்கு ஆளுனருடன் தொடர்பு கொண்டு சுமூகமான முறையில் தீர்வு காணுமாறு கேட்டுள்ளார்.

வடக்கு- கிழக்கு மாகாணங் களின் சுகாதார திணைக்களத் திற்கு வழங்கப்படவிருந்த 26 வாகனங்களில் 15 வாகனங்கள் மாத்திரமே வழங்கிவிட்டு ஏனைய வற்றினை ஏனைய திணைக் களங்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தகவல்கள் வெளியாயிருந்தன எனினும் இது குறித்து ஆளுனரின் பிரதம செயலாளருடன் தொடர்பு. கொண்டு பாராளுமன்ற உறுப்பி னர் கதைத்தபோது தாமே வாகன ஒதுக்கீடு தொடர்பாக தீர்மானிப்ப தாக வும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து ஆளுனர் டிரோன் பொனர்ந்துவிடம் தொடர்பு கொண்டு கதைத்ததாக வும் தாம் இது தொடர்பாக உரிய தீர்வினை எடுப்பதாக உறுதி யளித்ததாகவும் வன்னி பாரா ளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

# வவுனியா மாவட்டத்தின் நிலைமைகள் குறித்து அரசியல்துறையினர் பொது மக்களுக்கு விளக்கம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் தற் போதைய நிலைமைகள் தொடர் பாக விடுதலை புலிகளின் அரசி யல் துறையினர் மக்களுக்கு விளக்கம் அளித்துவருகின்றனர்.

வவுனியாவின் அனைத்து பிரி வினரையும் தனித்தனியாக அழைத்து மேற்படி சந்திப்புக்கள் இடம் பெறுவதாகவும் அந்த வேலைத்திட்டம் கிராம மட்டத் திலும், கோட்ட மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் இடம் பெற்று வருவதாகவும் வவுனியா மாவட்டஅரசியல்துறை பொறுப் பாளர் தி.ஞானவேல் தெரிவித் தார்.

தொடர்ந்து மக்களுக்கு இன் றைய அரசியல் நிலைப்பாடு தொடர்பாக விளக்கமளிக்கும் அதே சமயம் மக்களின் கருத்துக் களும் கேட்டறிந்து கொள்வதாக வும் தெரிவிக்கப்படுகிறது. இந்த சந்திப்புக்களில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு வருகின்றனர். நிர்வாக பொறுப்பாளர். பூவண் ணன் தேசிய எழுச்சி பேரவை பொறுப்பாளர் சஞ்சை ஆகியோ ரும் கலந்து கொண்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்தேற்றல்

வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி மருந்தேற்றல் பூநகரிப் பிரதேசசபையால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இம் மாதம் 14ஆம் திகதி சாமிப்புலத்திலும், 15ஆம் திகதி நல்லூரிலும்,16ஆம் திகதி ஆலங்கேணியிலும், 17ஆம் திகதி தம்பிரா யிலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படாத நாய்கள் கட்டாக்காலி நாய்களாக கருதப் பட்டு கட்டாக்காலி நாய்கள் அழிக்கும் செயற்பாடு நடைபெறும் எனப் பூநகரி பிரதேச சபை விசேட ஆணையாளர் சு.தனபாலசிங்கம் அறிவித்துள்ளார். (34)

*-இரட்டை வாய்க்கால்-மாத்தளன்-*

# வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளதால் போக்கு வரத்துப் பாதிப்பு

(முல்லை)

இரட்டை வாய்க்காலிலிருந்து மாத்தளன் வரையான வீதி மிக மோசமாகப் பாதிப்படைந்து மக்கள் போக்கு வரத்துக்குப் பெரும் இடையூறாக உள்ளது என தெரிவித்ததையடுத்து இரு மாத காலமாக கிரவல் பறிக்கப்பட்டு இது வரையும் இவ்வீதி செப்பனிடப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் வலைஞன் மடம் வரை ஒரு கிலோமீற்றர் தூரம் குன்றும் குழியுமாக நீர் நிறைந்து காணப்படுவதால் நோயாளர்களைக் கூட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்பட்டு அவசர நோயாளர் ஒருவரை புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்த்ததாகவும் தெரிவித்தனர். இது விடயமாக கரைதுரைபற்று உதவி அரச அதிபரிடம் மகஜர் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தனர்.(20)

# தொழில்சார் பயிற்சி நிறைவு விழாவில் கண்காட்சி

(ஒட்டுசுட்டான்)

உலக கனேடிய பல்கலைக் கழக சேவை நிறுவனமும் கிரா மிய பொருளாதார அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து நடாத்திய மின்னொட்டு, மரவேலை தொழில் சார்பயிற்சியின் நிறைவு விழாவும் கண்காட்சியும் 9, 10ஆம் திகதி களில் நடைபெற்றது.

தொழிற் பயிற்சி மாணவன் மு.முத்துகுமரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுசுட ரினை கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு நிறுவனப் பணிப் பாளர் எஸ். ராணிமைந்தன் ஏற்ற தேசியக் கொடியினை புனித பூமி சிறுவர் இல்ல இயக்குனர் இ.நவ நீதன் ஏற்ற மங்கல விளக்கினை கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தெ.ஜீவன் ஏற்ற கண்காட்சி மண்டபத்தின் நாடா வினை வெட்டி ஒட்டிசுட்டான் பிர தேச செயலாளர் செல்வி சுபா சினி கந்தையா திறந்து வைத்து கண்காட்சியினையும் ஆரம்பித்து வைத்தார்.

கருத்துரைகளை மரவேலை போதனாசிரியர் இ.பத்மசேகர் மின்னொட்டு போதனாசிரியர் கு.குணசீலன் ஆகியோர் ஆற்றி னர்.

கிராமசேவைகள் சோமசுந் தரம்பூஸ் நிறுவனவெளிக்கள உத்தியோகத்தர் த.யசோதரன் ஆகியோர்உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)

# வீட்டுச் சுவர் இடிந்து வீழ்ந்த இரு சம்பவங்களில் இருவர் காயம்

(புதுக்குடியிருப்பு)

முல்லை.மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் தேவிபுரம் அ.பகுதியில் நிலம் ஊற்றெடுத்துள்ளதால் வீட்டின் சுவர் விழுந்து ஒருவர் காயமடைந்துள்ளார். 46 வயதுடைய கார்த்திகேசு சிவசுப்பிரமணியம் என்பவரே காயமடைந்தவராவார்.

இச்சம்பவம் கடந்த 6ஆம் திகதி இடம் பெற்றுள்ளது. இதேவேளை கடந்த வியாழனன்று 43 வயதுடைய ஜேபாலன் பிரேமா என்பவருக்கு மேல் சுவர் இடிந்து விழுந்ததால் அவர் காயமடைந்தார்.

இதேவேளை கனத்த மழை காரணமாக சுமார் 500இற்கும் மேற்பட்ட கிணறுகள் இடிந்து வீழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (08)



தமிழீழ கல்விக்கழகத்தின் ஏற்பாட்டின்பேரில் க.பொ.த.உயர்தர தமிழ் ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு கடந்த செவ்வாய்கிழமை முதல் வியாழக்கிழமை வரை மூன்று நாட்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது ஆரம்ப செயலமர்வின் போது கலந்து கொண்டவர்களை படத்தில் காணலாம். (படம் சோதி)

# மட்டக்களப்பில் பெண்களுக்கு எதிராக 165 வன்முறைச் சம்பவங்கள் பதிவு!

(மட்டக்களப்பு)

இவ்வாண்டின் 11 மாதங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண களுக்கெதிரான 165 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் தெரிவித் துள்ளது.

பெண்களுக்கு எதிரான 121 வீட்டு வன்முறைகளும் சிறுமி களுக்கெதிரான 10 துண்புறுத் தல்களும் இடம்பெற்றுள்ளன அதேவேளை சிறுமிகளுக்கெதி ரான 10 பாலியல் வற்புணர்ச் சிகளும் 2 பாலியல்துன்புறுத்தல் களும் இடம்பெற்றுள்ளதாகவும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தக் காலப் பகுதியில் ஒரு சிறுமியும் 3 பெண் களும் கொல்லப்பட்ட சம்பவங் களுடன் மொத்தமாக 165 வன் முறைச் சம்பவங்கள் நிகழ்ந்த தாகவும் சூரியா பெண்கள் அபி விருத்தி நிறுவனம் வெளியிட் டுள்ள ஆய்வு அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

# புனிதபற்றிமா றோ.க.த.க.வி.பொன்விழா நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் புனித பற்றிமா றோமன் கத்தோ லிக்க தமிழ்கலவன் வித்தியால யம் மற்றும் திருக்குடும்பகன்னி யர் மடத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

உருத்திரபுரம் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற மேற்படி ஐம்ப தாவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, பங்குத்தந்தை தேவசகாயம் அடிகள், தென்இந்திய திருச்சபை யாழ். ஆயர், முன்னாள் புனித பற்றிமா றோமன்கத்தோலிக்க வித்தியாலய அதிபர் அருட்ச கோதரி எலிசபெத் அம்மா மற்றும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோ தரிகள், பொதுமக்கள் பெருமள வில் கலந்து கொண்டனர்.

அன்று நண்பகல் புனித பற்றிமா ஆலயத்தில் யாழ். ஆயர். தோமஸ் சௌந்தரநாயகம் ஆண் டகையினால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. (சோ)

# பிரிவுபசார வைபவம்

(முல்லை)

சென்ற வருடம் இடமாற்றம் பெற்றுச் சென்ற இரு பாடசாலை அதிபர்களுக்கு பிரிவுபசார வைப வமும், விருந்துபசார வைபவமும் கடந்த 7ஆம் திகதி சிலாவத்தை தமிழ் வித்தியாலய அதிபர் க.திருக்குமரன் தலைமையில் நடைபெற்றது.

சிலவாத்தை றோ.க. வித் தியாலய அதிபர் செ.மாசிலாமணி, சிலாவத்தை இ.த.க.பாடசாலை அதிபர் ம.அன்ரன்குலதாஸ் ஆகி யோருக்கே பிரிவுபசார வைபவம் நடைபெற்றது. வாழ்த்துரைகளை பாடசாலை ஆசிரியர் விநோயா, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் மணிவண்ணன் ஆகியோர் நிகழ்த்தினர். இவர் களுக்கான அன்பளிப்புப் பரிசில் களை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் வழங்கினர். 8ஆம் திகதி இதே பாடசாலையில் அடுத் தவருடம் 10ஆம் ஆண்டுக்காக வேறு பாடசாலை செல்லும் மாண வர்களுக்காக விருந்துபசாரமும், அதிபர் க.திருக்குமரன் தலைமை யில் நடைபெற்றது குறிப்பிடத்தக் கது. (20)

# சிறுவர் பராமரிப்பு, உரிமை; ஒருநாள் பயிற்சி வகுப்பு

(முல்லை)

சிறுவர் நன்னடைத்தை பராமரிப்பு உரிமை தொடர்பாக ஒருநாள் பயிற்சி வகுப்பு ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் அண்மையில் உதவி அரச அதிபர் செல்வி க. சுபாசினியின் ஒழுங்கு படுத்தலில் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி. பத்மாவதி - தியாகராசா தலைமையில் ஆரம்பமானது.

இதில் பயிற்சிகளை சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் வி.சிவ பாலசுப்பிரமணியம், சனசமுக நிலைய உத்தியோககத்தர் சு.ஜெயானந் தராசா கிராம அபிவிருத்திஉத்தியோகத்தர் த.சாந்தலிங்கம் உதவி அரச அதிபர் செல்வி க. சுபாசினி ஆகியோர் வழங்கினார்கள்.

பயிற்சியில் முப்பதுக்கு மேற்பட்ட கிராமத்தின் மாதர்சங்கம், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், செயலாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05,20)



கிளிநொச்சி தென்னிந்திய திருச்சபையின் கிறிஸ்து அரச ஆலயத்தில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் சிறார்களின் வரவேற்பு நடனத்தினை படத்தில் காணலாம். (படம்.சோதி)

# மூதறிஞர் சொக்கனின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு

## விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக் கழகம் அறிக்கை



மூதறிஞர், கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களின் மறைவுச் செய்தி எம்மீது இடியாகத்தான் இறங்கியது. எம் மண்ணின் முதுபெரும் தமிழறிஞரும், தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கு அளப்பரிய தொண்டாற்றியவரும், தமிழீழ விடுதலையைத் தன் அந்திமத்துக்கிடையில் காண அவாவுற்றிருந்தவரும், எழுத்தாளரும், கவிஞரும், நாடக ஆசிரியருமான சொக்கன் ஐயா காலமானதறிந்து நாங்கள் கலங்கியுள்ளோம் என விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக் கழகம் தெரிவித்துள்ளது. அது வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழ் மொழியின் ஆழ வேரறிந்து மூத்தோனாக எம்முடன் இவா வாழ்ந்திருந்தார். எம்மொழியின் சீரையும், செம்மையையும், மொழியின் வழுவிலா இலக்கண வகையையும் தெரிந்தும், தெளிந்தும் இருந்த பேரறிஞராக இவர் பிரகாசித்தார்.

இளமைதொட்டு தள்ளாமை வந்துற்றமுதுமைவரை ஓயாது சிந்தித்தும், எழுதியும் செயற்பட்டு வந்தவர் சிந்திப்பதை நிறுத் திவிட்டார். என்பது எம் தேசத் திற்கும், தமிழினத்திற்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பேரிழப் பாகும். இவர் தமிழ்மொழிமீது நிலைமாறாத காதலும், தமிழீழ விடுதலை மீது ஆழமான பற்றும் கொண்டிருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும் எம் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களது வழிகாட்டலையும் நெஞ்சார ஏற்றுத் தன் எழுத்திலும் அதனைப் பதிவுசெய்தார். சங்கிலியன் தொடக்கம் பிரபாகரன் காலம்வரை என்ற இவரின் பிரபலமான கட்டுரை மூலம் தன் உள்ளக் கிடக்கையை உலகுக்கு உணர்த்தியிருந்தார். 'ஈழநேசன்" என்ற புனைப்பெயரில் எழுதிய சிறுகதைகளில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை உணர்த்தினார். அரங்குகளில் கூட எந்த அச்சமுமின்றி தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குத் தன் ஆதரவைத் தெளிவுபடுத்தினார். தூய தமிழ்ப் பழக்கத்தை மீண்டும் வழக்கத்திற்குக் கொண்டுவரும் எத்தனிப் புக்கும், கருத்துருவாக்கத்திற்கும் இவர்காட்டிய உற்சாகம் எமக்கு உறுதுணையாக விளங்கியது. உடல் தளர்ந்திருந்த வேளையில் கூடஎமதுஅழைப்பையேற்று கலை, இலக்கிய அரங்குகளில் கலந்து கொண்டு காத்திரமான பங்களிப்பை நல்கினார். எம் மண்ணில் கலை, இலக்கியத்துறையிலும், தமிழை செம்மையாகக் கற்றறிந்து தெளியும் அறிவுப்புலத்திலும் புதிய தலைமுறை ஒன்று புலர்வதற்கு இவர் ஆற்றிய பெரும்பணி காலத்தால் அழியாததாகும். கலை, இலக்கியம், மொழி என்பவற்றுடன் எம் மண்ணையும் நேசித்த நாட்டுப் பற்றாளராகவும் சொக்கன் ஐயா எம்முடன் வாழ்ந்துபோனார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருடன், கலை,இலக்கியப் படைப்பாளிகளுடனும் விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகமும் இணைந்து கொள்கிறது. எம் தேசத்தின் மூத றிஞர் ஒருவரின் பிரிவால் எமது விடுதலை அமைப்பு துயருற்றிருக்கிறது. வந்தபோதும், எம்முடன் இருந்தபோதும் இவர் பதித்த தடங்கள் அவரின் மறைவுக்குப் பின்னும் எங்களுடன் இருக்கும் எனமேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர்களின் அத்து மீறல் தீவகக் கடற்பரப்பில் அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகக்கடற்பரப்புகளில் இந்திய மீனவர்களின் ஊடுருவல்கள் மீண்டும் ஆரம்பித்திருப்பதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நெடுந்தீவு, புங்குடுதீவு, இரணைதீவு, எழுவைதீவு, அனலதீவு ஆகியவற்றை அண்டியுள்ள கடற்பரப்புகளில் இவ்வாறான இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கும் தீவகக்கடற்றொழிலாளர்கள் இதுகுறித்து சிறிலங்கா கடற்படையினர் உரிய நடவடிக்கைகளைஎடுத்து அவர்களின் ஊடுருவல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான இந்திய மீனவர்கள் கனரக இழுவைப் படகுகளை பயன்படுத்தி தீவகக் கடற்பரப்பில் ஊடுருவி மீன்பிடிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுவதால் தீவகக்கடல் வளங்கள அருகிப்போவதுடன் சேதமாக்கப்படுவதாக தீவகக்கடற்றொழிலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (33)

### -தீவகக் கடற்பரப்பில் கைதான-

# 13 இந்திய மீனவர்களுக்கு 22வரை விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகக் கடற்பரப்பில் வைத்து வியாழக்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரண்டு இழுவைப்படகுகளையும் அதில் வந்து தொழிலில் ஈடுபட்ட 13 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ். குடாநாட்டுக் கடற்பரப்பில் ஊடுருவி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இம் மீனவர்களை கைது செய்த சிறிலங்காக் கடற்படையினர் அவர்களைப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் ஊர்காவற்றுறை பொலிசாரால் கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதவான் எம். பிறேம் சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து நீதவான் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (33)

# வலுகூடிய இயந்திரங்களைப்பாவிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்கக் கோரிக்கை

### -படையினரிடம் கடற்றொழிலாளர் சங்க சமாசம் விடுத்தது

(யாழ்ப்பாணம்)

வலுகூடிய இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகளில் சென்று கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு கடற்படையினரால் விதிக்கப்பட்டுள்ள தடைகள் நீக்கப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் சிறிலங்கா படைத்தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்தபின் குடாநாடுக் கடற்பரப்புகளில் 50 குதிரை வலுவிற்கு மேற்பட்ட படகுகளில் வலுகூடிய இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகளில்சென்று கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு படையினர் தடை விதித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டினுள் இடம்பெறும் கடல் மார்க்கமான ஊடுருவல்கள், அத்துமீறல்கள் என்பவற்றை கட்டுப்படுத்துதல் என்ற போர்வையில் சிறிலங்கா கடற்படையினரால் விதிக்கப்பட்டுள்ள இத்தடைகள் காரணமாக குடாநாட்டு மீனவர்கள் ஆழ்கடல் தொழிலில் ஈடுபட முடியாது தொழில் வாய்ப்பை இழக்கின்றமையும் சுட்டிக்காட்டியே சம்மேளனத்தலைவர் படையினரிடம் இக் கோரிக்கையை விடுத்துள்ளார். (33)

# தொழிற்துறை மேம்பாட்டிற்கு மூவிமெண்டோ கடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்,வலிகாமம் பிரதேச சுய தொழில்முயற்சியாளார்களின் தொழில்துறை மேம்பாட்டிற்கான உதவிகளைவழங்க"மூவி மெண்டே" என்ற சர்வேதேச-தொண்டர் நிறுவனம் முன்வந்துள்ளது. கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் இடப் பெயர்வுகளால் பாதிக்கப்பட்டுள்ள மேற்படி பிரதேச சுய தொழில் முயற்சியாளர்களது பொருளாதார மேம்பாட்டினை கவனத்தில் கொண்டே இவ் உதவியை வழங்க மூவிமெண்டே முன்வந்துள்ளது. அந்த அடிப்படையில் வலி காமம் சங்கானையில் உள்ள சுய தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில் உபகரணங்கள், ஊக்குவிப்பு கடனுதவி என்பன வழங்கப்பட்டுள்ளன. (33)

# டிறிபேக் கல்லூரியின் கட்டடத் தொகுதி சுவிஸ் தூதரால் திறந்து வைப்பு

(யாழ்பாணம்)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சுமார் 7.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கட்டி முடிக்கப்பட்ட வகுப்பறைக்கட்டடத் தொகுதியொன்றினை சுவிஸ் நாட்டின் இலங்கைக்கானதூதர்பேனாடினோ றெகஸோனி நேற்று முன் தினம் வைபவரீதியாகத் திறந்து வைத்துள்ளார்.

2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் முற்றாக நிர்மூலமாகிப் போயிருந்த சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வகுப்பறை கட்டடத்தொகுதியின் ஒரு பகுதியினை அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் நிறுவனம் கட்டி வழங்கியிருந்தது.

அவ்வாறு கட்டி வழங்கப்பட்ட வகுப்பறை தொகுதிகளையே இலங்கைக்கான சுவிஸ் தூதர் பேனாடினோ றெகஸோனி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளினது அரசியல் துறைப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஆரம்பப்பிரிவிற்கான வகுப்பறைக் கட்டடம் மற்றும் செயற்பாட்டறை என பல வசதிகளையும் கொண்ட இக்கட்டடத்தொகுதியின் ஒவ்வொரு பிரிவையும் தூதரின் பாரியார் திருமதி எல்.பேனாடினோ தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் மற்றும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாஆகியோரும் திறந்து வைத்திருந்தனர்.

அங்கு உரையாற்றிய சுவிஸ் தூதர் தமதுரையில் "யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டின் கல்வித்துறையினை மேம்படுத்த சுவிஸ் அரசினது பங்களிப்பு தொடர்ந்தும் இருக்கும். குறிப்பாக தென்மராட்சியின் சில பகுதிகளில், கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் புதிய கட்டடங்களை அமைத்து வழங்குவதில் சுவிஸ் அரசு ஈடுபட்டுள்ளது. இப்பணிகளிற்கு ஒத்துழைத்துவரும் கல்வித் திணைக்களத்தின் பாடசாலை வேலைகள் பொறியியல் பிரிவிற்கு நன்றி உரித்தாகட்டும் அடுத்த ஆணடிலும் சுவிஸ் அரசு மேலும் பல பாடசாலைகளில் வகுப்பறை நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவுள்ளதென தெரிவித்தார்.

இதேவேளை நல்லூரிலுள்ள அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் நிறுவனத்தின் அலுவலகத்திற்கும் அவர் நேற்று முன்தினம் நேரில் விஜயம் செய்திருந்தார். (27)

# திறப்பு விழா

(நல்லூர்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் பாடசாலை கட்டடவேலைப் பகுதிக்காக கட்டப்பட்ட கட்டடத்திறப்பு விழா நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

கட்டடவேலைப் பகுதி பொறியியலாளர் கு. சிவபாலன் தலைமையில் இடம் பெற்ற இன் நிகழ்வில் கட்டடத்தை சுவீஸ் அபிவிருத்தி திணைக்களத்தின் பிராந்தியப் பணிப்பாளர் -றுடால்வ்திறந்து வைத்தார். மங்கல விளக்கினை யாழ்ப்பாணம் கல்விவலய கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன் ஏற்றிவைத்தார். (41)

### -காணாமல்போனோர் குடும்பங்களின்-

# குடும்பத்தலைவிகளுடனான கலந்துரையாடல் இன்று

காணாமல் போனோர் குடும்பங்களின் குடும்பத்தலைவிகளுடனான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

96,97 ஆண்டுக் காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் பல நூற்றுக் கணக்காண குடும்பத் தலைவர்களும் , இளைஞர்களும் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு இன்று வரை அவர்களின் நிலைமைகள் என்வென்று தெரியாத நிலைமை காணப்படுகின்றது.

குடும்பத்தலைவர்கள் மற்றும் உழைப்பாளிகளை இழந்து குடும்பப் பொறுப்பை ஏற்றுள்ள பெண்களையே இக் கலந்துரையாடலுக்கு யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் அழைத்துள்ளனர்.

இவர்களின் எதிர்காலப்புனர்வாழ்வு சம்பந்தமாகவே கதைப்பதற்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (41)

# தொழிற்பயிற்சி நெறி

(வடமராட்சி)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தினரால் பாடசாலைக் கல்வி கற்றலை விட்டு விலகியோருக்கான தொழில்சார் பயிற்சி நெறி 2005 தை மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சு, ஆங்கில தட்டச்சு பயிற்சி நெறிகள் வாரத்தில் ஏழுநாட்களும் நடைபெறவுள்ளது. பயிற்சி பகுப்பாய்வுகள்,அரசஅலுவலகங்களில் ஆறு மாதகால செயல் முறைப் பயிற்சி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இப்பயிற்சி நெறியில் பங்கு கொள்ள ஆர்வமுடையயோர் கழகத்துடன் தொடர்பு கொண்டு இவ் விடயம்தொடர்பான மேலதிக கருத்துக்களைப் பெற்று விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து இம் மாதம் 20 ஆம் திகதிக்கு சேர்பிக்குமாறு தெரிவிக்கப்படுகின்றது. (கா)

# ஊழியரின் பணிப்புறக்கணிப்பால் யாழ்.பொது நூலகச் செயற்பாடும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை ஊழியர்கள் மேற்கொண்டு வரும் பணிப்புறக் கணிப்பு மற்றும் மறியல் போராட்டங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக யாழ். பொதுசன நூலகத்தின் செயற்பாடுகளும் பெரிதும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

மாநகர சபை ஊழியர்களது போராட்டங்களின் காரணமாக மாநகர சபையின் நிர்வாக செயற்பாடுகள் ஸ்தம்பித்துள்ளமையால் மாநகர சபையின் நிர்வகிப்பில் இயங்கி வரும் யாழ். நூலகத்தின் செயற்பாடுகளும் ஸ்தம்பித்துள்ளன.

இதன் காரணமாக கடந்த இரு தினங்களாக யாழ். பொதுசன நூலகம் பாவனைக்காகத் திறந்து விடப்படவில்லை. இதனால் நூலகச் சேவையை பெற்றுக் கொள்வதற்காக வந்த பலரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (33)

# எஸ்.பி.திஸாநாயக்கவுக்குச் சிறை

## ஐ.தே.க.வுக்கு விடுக்கப்பட்ட சவால்

“அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ளத் தேவையான மூன்றிலிரண்டு பெரும்பான்மை எமக்குக்கிடைக்கா விட்டால் பாராளுமன்றத்தைச் சிறிது காலம் மூடி அதனை அரசியலமைப்புச் சபையாக மாற்றுவோம். இதற்கு எதிராக இருந்தால் நீதிமன்றங்களையும் மூடுவோம். இதற்கு இணங்காத நீதிபதிகள் வீட்டுக்குச் செல்லலாம்.” இவ்வாறு உரையாற்றியவர் வேறு எவருமல்ல இன்று வெலிக்கடைச்சிறையிலுள்ள எஸ்.பி.திஸாநாயக்கவே ஆவார். இப்படி உரையாற்றியது 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒரு நிகழ்வில், இதனைச் சண்டேரைம்ஸ் பிரசுரித்திருந்தது. இது நீதிமன்றத்தை அவமதிக்கும் உரை எனக்கருதி இதனை ஆராய மூன்று நீதியரசர்கள் பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்டார். இது தொடர்பாக விளக்கமளிக்குமாறு எஸ்.பி. திஸாநாயக்க கோரப்பட்டார். ஆனால் அப்பொழுது அவர் சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் சக்தி மிக்க ஒருவராக, அமைச்சராக இருந்தார், கட்சியின் முக்கியஸ்தராக இருந்தார், பல தேர்தல் வெற்றிக்குக்




காரணமானவராக இருந்தார். அப்போது தப்பித்துக்கொண்டார்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் பிரவேசத்துக்கு மட்டுமல்ல 1994 தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வெற்றிக்குப் பின்னரான பல வெற்றிகளுக்கும் காரணமாக இருந்த எஸ்.பி.திஸாநாயக்க இன்று வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள அச்சகப்பகுதியில் கடுழியம் புரிந்து வருகிறார். 1989ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்கவிற்காக கிராமம் கிராமமாகத் துண்டுப்பிரசுரம் விநியோகித்தவேளை ஜே.வி.பி. உறுப்பினர் என்ற குற்றச்சாட்டின் பேரிலும் அவர் சிறையிலடைக்கப்பட்டிருந்தார். ஆனால் அன்று சிறையிலடைக்கப்பட்டது ஐ.தே.க.ஆட்சியில் ஆகும். இன்று சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் இவர் மீது கடந்த ஏழுமாதகாலத்தில் இரண்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அத்துடன் வழமை போல வாய்மூலமான குற்றச்சாட்டாக அல்லாது இவையிரண்டும் நீதிமன்றத்தில் வழக்குகளாகவும் பதிவு செய்யப்பட்டன.

முதலாவது கடந்த வருடம் நவம்பர் மாதம் 3ஆம் திகதி ஹபராதுவவில் நடைபெற்ற ஏர்பூட்டு விழாவில் உயர் நீதிமன்றத்தை விமர்சித்து அவர் ஆற்றிய உரை உயர் நீதிமன்றத்தை அவமதிக்கிறது என்பதாக அமைந்தது. இதனை மூன்று சு.க. ஆதரவாளர்கள் தாக்கல் செய்திருந்தனர். இரண்டாவது 30.03.1995இற்கும், 30.09.2001 இற்கும் இடையே அதாவது சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் பலமிக்க அமைச்சராக இருந்தவேளை 2 கோடியே 90 இலட்சம் ரூபா சொத்துச்சட்ட விரோதமாகச் சேர்ந்தமை தொடர்பானது. இதனை இலஞ்ச ஊழல் திணைக்களம் தாக்கல் செய்துள்ளது.

இதிலே உயர் நீதிமன்றத்தை அவமதித்து அவர் ஆற்றியதாகக் கூறப்பட்ட உரையை உயர்நீதிமன்றம் விசாரித்து அவரைக் குற்றவாளியாகக் கண்டு இரண்டு வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது. இத்தீர்ப்பானது உயர்நீதி மன்றத்தால் வழங்கப்பட்டுள்ளமையால் மேல்முறையீடு செய்ய முடியாது. அதேவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொதுமன்னிப்புக்கு எஸ்.பி.திஸாநாயக்க கோரமாட்டார் என்பதும் தற்போது உறுதியாகியுள்ளது. எஸ்.பி. திஸாநாயக்கவின் இயல்பைப் பொறுத்தும் அண்மைக்காலத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், எஸ்.பி.திஸாநாயக்கவுக்கும் இடையில் நிலவிய உறவை வைத்துப்பார்க்கும் போதும் பொதுமன்னிப்பு அவர் கோரமாட்டார் என்பது வெளிப் படையாகிறது. எனின் அவர் வெளியேவர வேண்டுமாயின் பாராளுமன்றத்தினூடாக ஐ.தே.க. முயல வேண்டும் அல்லது ரணில் சனாதிபதியாகும்வரை காத்திருக்க வேண்டும்.

ஆனால் எஸ்.பி. திஸாநாயக்கவுக்குக் கிடைத்துள்ள இத்தண்டனை ஓர் அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் என்றே ஐ.தே.கட்சி பார்க்கிறது. அதற்குக் காரணங்கள் பல உண்டு.



“இத்தண்டனையானது எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை வேட்டையாடுவதற்கான நடவடிக்கையாகும்” என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார். அதே வேளை “உயர் நீதிமன்றத்தின் இந்தத்தீர்ப்புப் பற்றி பகிரங்கமாகப் பேசவும் கருத்துக் கூறவும் தயங்கப் போவதில்லை” எனவும் கூறியிருக்கிறார்.

இதேவேளை பாராளுமன்றத்தில், ஐ.தே.க.வினர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தும் பாராளுமன்ற நட கையைத் தடுக்கும் வகையிலும் ஈடுட வருகின்றனர்.

உய நீதிமன்றத்தின் இத்தீர்ப்புக்குறித்து இவ்வாறு விமர்சனங்கள் எழுந்து வருவதற்குச் சனாதி தி சந்திரிகா குமாரதுங்கவும் ஒரு வகையில் காரணமாக இருந்துள்ளார். அவர் அண் மையில் சிறிலங்காவின் நிதித்துறை ரான்ஸ்பரன்சி ின்ரநசனல் எனும் அமைப்பின் அற க்கையை அடிப்படையாக வைத்து விமர்சித்திருந்தார். அத்துடன் அனுரா பண்டாரநாயக்கா அண்மையில் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் புதுவருடத்தில் எஸ்.பி. திஸாநாயக்க சிறைச்சாலைச் சாப்பாடு சாப்பிடுவார் எனக் கூறியிருந்தமையும் இந்த விமர்சனத்துக்குக் காரணமாக இருந்திருக்கிறது.

1994 ஆம் ஆண்டு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சி எற்பட்ட போது அவ் ஆட்சியில் பலம் வாய்ந்தவர்களாக இருந்தவர்கள் மூவர் அவர்கள் அனுருத்தரத்வத்த, எஸ்.பி.திஸாநாயக்க, மங்களசமரவீர ஆகியோராவார். இவர்களுக்குச் சந்திரிகா முக்கிய அமைச்சுப் பதவிகளை வழங்கினார். கட்சியின் எதிர்காலத்தை யுத்தமூலம் தக்கவைக்க ஆளும் கட்சி திட்டமிட்டிருந்த அதேவேளை வாக்கு வங்கிகளாகவுள்ள ஏழைமக்களைக் கவர அவர் கொண்டுவந்த சமுர்த்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த எஸ்.பி.திஸாநாயக்கவை நியமித்தார். அதுமட்டுமல்லாது பல அமைச்சுப் பதவிகள் அவருக்கு வழங்கப்பட்டிருந்தன. 2000ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் பின் சமுர்த்தி அமைச்சில் நடைபெற்ற ஊழல்கள் தொடர்பான குற்றச்சாட்டு எழுந்த போது எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு அப்பதவி கிடைக்குமா? என்ற கேள்வி எழுந்த போதும் இறுதியில் சந்திரிகா பதவியை வழங்கவே செய்தார். பின்னர் 2001 ஆம் ஆண்டு தேர்தலில் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினராக எஸ்.பி.திஸாநாயக்க மாறிய போது சமுர்த்தி அமைச்சை வழங்க சனாதிபதி மறுத்து வந்தார். நான்கு தடவைகள் அமைச்சு பதவியேற்பு வைபவங்கள் ஒத்திப்போடப்பட்டன. இறுதியில் சமுர்த்தி அமைச்சுப் பதவியை வழங்க வேண்டிய நிலை சனாதிபதி சந்திரிகாவுக்கு ஏற்பட்டது. அவ்வேளையெல்லாம் குற்றச்சாட்டாக இருந்த சமுர்த்தி ஊழல் தொடர்பான குற்றச்சாட்டு இப்பொழுது தான் நீதிமன்றத்தில் வழக்காகியிருக்கிறது.

இதேவேளை 2001 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவமதிக்கும் வகையில் எஸ்.பி.திஸாநாயக்க உரையாற்றியதான குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பான காட்சிகளையும் ரூபவாஹினி பல தடவைகள் ஒளிபரப்புச் செய்தது. அதேபோன்று தான் ஹபராதுவவில் எஸ்.பி.திஸாநாயக்க ஆற்றிய உரையும் அதாவது நீதிமன்றத்தை அவமதிப்பதாக அமைந்துள்ளதாக தீர்ப்பளிக்கப்பட்டவரையும் 30 தடவைகளுக்கு மேல் ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டது.

ஆனால் இவ்விடயத்தை இறுகப்பிடித்துக் கொண்டு எஸ்.பி.திஸாநாயக்கவை ஆளும் கட்சி பழிவாங்கி விட்டதாகவே ஐ.தே.கட்சி கருதுகிறது.

இதேவேளை இத்தீர்ப்பின் மூலம் ஆளும் கட்சிக்கு தேர்தல் இலாபம் கிடைத்திருப்பதும் வெளிப்படையாகும். 1994 இற்குப் பின்னர் நடைபெற்ற 6 தேர்தல்களில் அனைத்திலும் பொது சன ஐக்கிய முன்னணியே வெற்றி பெற்றது என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடிக்கடி பெருமை பேசிக் கொள்வார். இந்த வெற்றிகளுக்குப் பின்னணியில் இருந்தவர்கள் மூவர், ஒருவர் அனுருத்த ரத்வத்த இவர் தேர்தல் வெற்றிக்காக பல்வேறு வழிமுறைகளைக் கடைப்பித்தார். அதேவேளை நுவரெலியா மாவட்டத்தில் எஸ்.பி.திஸாநாயக்க இருவரும் தனக்கென ஒரு பிரதேசத்தையே கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு தேர்தல் பிரச்சாரம் நடத்தியவர் மூன்றாமவர் தற்போதைய பிரதமர் மகிந்தராஜபஷ்ச இவருக்கு அவரது பகுதியில் பலத்த ஆதரவு உண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை முதல் இருவரிலும் தேர்தல் கால வன்முறைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் உண்டு. மூன்றாமவரில் 2000 ஆம் ஆண்டு தேர்தலின் போது அவ்வாறான குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியோரில் முக்கியமானவர்கள் ஜே.வி.பி.யினராவார் அதேவேளை விருப்பு வாக்கிற்காக கட்சிக்குள்ளேயே அல்லது கூட்டுக் கட்சிக்குள்ளேயே வன்முறைகளைப் புரிவதாக குற்றச்சாட்டும் எழுந்தது. இதனை டி.எம் ஜெயரட்ண, ரவூப்ஹக்கீம் ஆகியோர் சுமத்தியிருந்தனர்.

இதேவேளை எஸ்.பி.திஸாநாயக்க 2000 ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேனவுடன் போட்டியிட்டு கட்சியின் செயலாளராகுமளவிற்கு சனாதிபதி சந்திரிகாவிடமும் கட்சியிலும் அவருக்குச் செல்வாக்கு இருந்தது. ஆனால் சந்திரிகா கட்சியை பாதாளம் நோக்கிச் செலுத்துவதாக குற்றம் சாட்டி எஸ்.பி.திஸாநாயக்க கட்சியிலிருந்து வெளியேறியபின் சனாதிபதி சந்திரிகாவின் விரோதியானார். அவ்வேளை அவருடன் பீரிஸ் உட்பட எட்டுப் பேர் கட்சியிலிருந்து வெளியேறிய போதிலும் சந்திரிகா முதலாவது எதிரியாக எஸ்.பி.திஸாநாயக்கவே இருக்கிறார்..

இந்நிலையில் வரப்போகும் தேர்தலில் ஐ.தே.க.வின் வெற்றிக்காக முழுமூச்சாக களமிறங்கிய வேளையில் எஸ்.பி.திஸாநாயக்க போன்ற ஒருவர் முடக்கப்பட்டமை ஆளும் கட்சிக்கு சாதகமான ஒன்றாகும். இதேவேளை சனாதிபதி சந்திரிகாவின் பதவிக் காலம் எப்போது முடிவடைகிறது? என்பது குறித்த சர்ச்சையில் 2005 டிசெம்பருக்குப்பின் பதவியில் அவரை நீடிக்கவிட மாட்டோம் என்று ஐ.தே.க. சூளுரைத்துள்ள நிலையில் போராட்டங்களை ஒழுங்கமைப்பதற்காக எஸ்.பி. திஸாநாயக்கவே நம்பப்பட்டிருந்தார்.

இவ்வாறான சூழலில் எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு ஏற்பட்டுள்ள நிலைமை ஐ.தே.க.வையும், சு.க.வையும் மேலும் விலகிச் செல்ல வழிவகுத்துள்ளது. ஐ.தே.க. இப்பொழுது ஆட்சிக்கு எதிராக போராடியே ஆக வேண்டிய நிலைக்குத்



தள்ளப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் அதாவது ஆட்சி கவிழ்க்கப்பட்ட போதும் கூட போராட்டங்களை நடத்துவதற்கு ரணிலே தடையாக இருந்ததாக ஐ.தே.க. ஆதரவாளர் மட்டத்தில் கருத்து இருந்தது. இதனால் கட்சிபின்னடைவைச் சந்தித்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இன்று புதிய நிலையில் இன்னமும் போராடாது அமைதி காக்க முயன்றால் ரணிலின் தனிமைத்துவத்துக்கு எதிரான கருத்துகள் முனைப்புப் பெறுவது தவிர்க்க இயலாதது. இதனால் போராட்டங்களை ஏற்பாடு செய்ய ரணில் முன்வரக் கூடும். அது எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை உடனடியாகக் கூறி விடமுடியா விட்டாலும் போராட்டம் நடத்துவது ஐ.தே.க. மேலும் பின்னடைவைச் சந்திப்பத்தை தடுக்க உதவும் என்றே கூறலாம் ஏனெனில் அடுத்த ஒரு வருடகாலம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அரசியல் எதிர்காலத்தைத் தக்கவைக்க தீவிர நடவடிக்கையில் இறங்குவார் என எதிர்பார்க்கலாம். படிப்படியாக அதில் அவர் முன்னேறியும் வருகிறார் அடுத்த இலக்காக சபாநாயகரை மாற்ற ஆளும் கட்சி முயலக் கூடும். அதற்கான அறிகுறியும் தென்படத் தொடங்கியுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியமையானது அதற்கான உற்சாகத்தை ஆளும் கட்சிக்கு கொடுத்திருக்கிறது.

எனவே அடுத்தவருடம் தென்னிலங்கையில் பல மாற்றங்களை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. முக்கியமாக அரசியலமைப்பை ஆளும் கட்சியின் விருப்புக்கு ஏற்ப மாற்ற முடியுமா? என்பது கவனத்திற்குரிதாகும். □

வேலவன்

**02.**

* ஈராக்கின் மத்திய பாக்தாத் நகரில் இடம் பெற்ற மோட்டார் தாக்குதலில் ஒரு ஈராக்கிய பொலிஸார் கொல்லப்பட்டதுடன் பொலிசார் சிலர் காயமடைந்தனர்.

**03.**

* ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் பள்ளிவாசல் ஒன்றிலும் பொலிஸ் நிலையமொன்றிலும் நடத்தப்பட்ட கார்க்குண்டு வெடிப்பில் 16 ஈராக்கிய பொலிசார் உட்பட 30 பேர் கொல்லப் பட்டனர்.



குண்டுவெடிப்பின் கோரம்

* காஷ்மீரின் பாரமுல்லா முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 12 இந்தியப் படையினர் ஸ்தலத்திலேயே பலி.

* ரஷ்ய சனாதிபதி விளாடி மிர்புட்டின் 3 நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லி பயணம்.



இந்தியாவில் புட்டின்

**04.**

* ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு வெளியே இடம் பெற்றவாகன தற்கொலைக் குண்டுத் தாக் குதலில் 7 பொலிசார் பலியானதுடன் 59 பேர் காயம்.



தீயணைக்கும்முயற்சியில்

* இந்தோனேசியாவிலுள்ள ஜாவாத் தீவில் பலத்த மழை பெய்ததன் கார ணமாக 11பேர் பலி.

* ஜம்முகஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தில் இரவில் சாலையில் பதிக்கப்பட்டிருந்த நாட்டு வெடி குண்டு வெடித்ததில் இராணுவரோந்து வாகனத்தில் சென்று கொண்டிருந்த இரா ணுவ மேஜர் உட்பட 9 பேர் பலி இதன் போது பொதுமகன் ஒருவரும் உயிரி ழந்தனர்.

* ஈராக்கிய பிரதமர் இயட்அலாவி ஜேர் மனிக்கு விஜயம் மேற்கொள்ளும் போது அவர் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டி ருந்தனர்.என்ற குற்றச்சாட்டின் பேரில் ஜேர்மனிய பொலிசார் 3 ஈராக்கியர் உட்பட 4பேரை கைது செய்தனர் இவர்கள் அல் இஸ்லாம் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்க ளென்று கூறப்படுகின்றது.

**05.**

* யப்பான் தலைநகர் டோக்கியோவில் கடும் சூறாவளி வீசியதனால் 14 பேர் படு காயம்.



வெற்றியின் மகிழ்வில

* 2004 ஆம் ஆண்டின் உலக அழகிப் பட்டத்தை பெரு நாட்டு அழகி மரியா ஜீலியா மான் டில்லா கார்சியா வென் றெடுத்துள்ளார். சீனாவின் சான்யா நகாில' உலக அழகிப் போட்டி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



* பாகிஷ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் லண்ட னுக்கு விஜயம் செய்து பிரதமர் ரொனிபிளேயரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

* சிம்பாவேயின் துணை சனாதிபதி ஜாய்ஸ் முஜரு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* தாய்லாந்தின் சமாதானத்தின் தேவையை உணர்த்துவதற்காக அங்குள்ள முஸ்லிம் நகரங்கள் மீது 50 விமானங்கள் மூலம் 10 கோடி காகிதப்புறாக்கள் போடப் பட்டன.



காகிதப்புறாக்களுடன்

* அமெரிக்கப்படைகளுக்கு உதவியாக செயற்பட்டு வந்த 17 ஈராக்கியர்கள் உட்பட 23 பேரை ஈராக்கிய போராளிகள் சுட்டுக் கொலைசெய்தனர்.

* பெங்களூரில் நடைபெற்ற பெடரேஷன் கோப்பைக் கால்பந்துப் போட்டியில் டெம்போஸ் போர்ட்ஸ் கிளக் கோப்பையை வெல்லக் காரணமான பிரேசில் வீரர் கிறிஸ்டியானோ டெலிமா ஜீனியர் மைதானத்திலேயே உயிரிழந்தார்.



சோகநிகழ்வு

**6.**

*. சீனாவில் நிலக்கரிச் சுரங்கங்கள் தென்மேற்குப் பகுதியில் உள்ள குய்சோ மாகாணத்திலுள்ள கிராம மொன்றில் நிலச்சரிவு ஏற்பட்டதில் 25 வீடுகள் தரைமட்டமாகியதுடன் 32 பேர் பலியாகினர்.



## கடந்த வாரத்தில்

## 02.12.2004-08.12.2004

*. சவுதியரேபியாவின் ஜிட்டா நகரிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் 5 சவுதி படையினரும் 2 தீவிரவாதிகளும் பலி ஊழியர்கள் பலர் படுகாயமடைந்தனர்.



தூதரகமருகே...

* தெஹல்கா போலி ஆயுத ஊழல் தொடர்பாக பா.ஜ.க. முன்னாள் தலைவர் பங்காரு லட்சுமணன் சமதாக்கட்சி முன்னாள் தலைவர் ஜெயா ஜெட்லி உட்பட பலர்மீது 3 ஆண்டுகளுக்கு பின்பு சி.பி.ஐ வழக்குப் பதிவு செய்துள்ளது.

* ஸ்பானிய நகரங்களில் ஈ.டீ.ஏ. என்ற கெரில்லாக்கள் அமைப்பு ஏழு இடங்களில் குண்டு வெடிப்புக்களை மேற்கொண்டது.

* போதைப் பொருள் கடத்தியமைக்காக 6 பேருக்கு வியட்னாமில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

**7.**

* டமஸ்கஸ் சென்ற பலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் மஹ்மூத் அப்பாஸ் சிரிய சனாதிபதி பஷர் அல் அஸாத்தை சந்தித்துப்பேசினார்.

*. பாபர் மசூதி இடிக்கப்பட்டு 12 வரு டங்கள்பூர்த்தியடைந்த நிலையில் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட 1000 முஸ்லீம்களை பொலிசார் கைதுசெய்தனர்.

* ஆப்கானிஸ்தானின் தென்கிழக்கு மாகாணத்தில் தலிபான் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 3 இராணுவத்தினரும் 6 தலிபான் தீவிரவாதிகளும் உயிரிழந்தனர்.

* தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்தக் கோரியும் ஊழியர்கள் முதல் தலைமைச் செயலர் வரை தமிழிலேயே கருமமாற்றும் வகையில் சட்டதிருத்தம் செய்யப்பட வேண்டும் என்று கோரியும் தமிழ்ப்பாதுகாப்பு இயகத்தினர் ஆர்ப்பாட்டத்தினை நடத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலர் தொல் திருமாவளவன் தலைமை தாங்கினார்.

*. இஸ்ரேலின் காஸா பகுதியில் இடம் பெற்ற மோதலில் 4 பலஸ்தீனர்களும் ஒரு இஸ்ரேலிய வீரரும் பலி

*. கடந்த ஒக்டோபர் மாதம் ஆப்கானில் நடந்த [illegible]ாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற அந்நா[illegible] இடைக்கால சனாதிபதி ஹமிர் ஹர்ராய் உத்தியோகபூர்வமாக பதிவி ஏற்றார்.



பதவியேற்பு

**8.**

*'ஷாஹீத் 1'என்ற அணுவாயுதங் களைச் தாங்கிச் சென்று இல[illegible]கை[illegible] தாக்கும் ஏவுகணை ஒன்றை பாகிஸ்தான் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது. இது 700 கிலோமீற்றர் இலக்கைதாக்கக் கூடியதாகும்.

*. பலஸ்தீன சன்ாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் முஸ்தபாபர் கௌதீ மேற்குக்கரைப்பகுதியில் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டார் இவ்வேளை இஸ்ரேலியப் படையினர் கைது செய்து தடுத்து வைத்து துப்பாக்கி முனையினால் தாக்கியுள்ளனர். இதனையடுத்து மருத்து வமனை ஒன்றில் இவர் பரிசோதிக் கப்பட்டார்.



மருத்துவமனையில்....

# ஜோர்தானில் 140 இலங்கை பெண்கள் நிர்க்கதி
# சிறிலங்கா அரசு தொடர்ந்து பாராமுகம்

(கொழும்பு)

ஜோர்தானின் சுமார் 140 இலங் கைப் பெண்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இவர்களுக்கு உரிய தொழில்கள் இன்றி முகாம் ஒன்றில் உரிய உணவுகள் இன்றி இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இவர்களை நாட்டுக்கு திருப்பியழைக்கவோ அல்லது மீண்டும் வேலைவாய்ப்பைப் பெற்றுப் கொடுக்கவோ சிறிலங்கா அரசாங்கம் முனைப்பு எதனையும் மேற்கொள்ளவில்லை எனக் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

வெளிநாடுகளில் பணியாற்றும் பெண்களிடமிருந்து ஆண்டு ஒன் றுக்கு 13,645 கோடி ரூபா இலங் கைக்கு வருகின்ற போதும் பணிப் பெண்கள் தொடர்பாக அரசாங்கம் உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை விமர்சனத்துக் குரியது என தெரிவிக்கப்பட் டுள்ளது.

## அமைச்சரின் மனைவியின் கத்திக்குத்தில் வைத்திய நிபுணர் ஒருவர் படுகாயம்

பிரபல தமிழ் வைத்திய நிபுணரொருவர் வெள்ளிக்கிழமை பிற்பகல் அமைச்சரொருவரின் மனைவியினால் கத்தியால் குத்தப்பட்டு காயமடைந்துள்ளார்.

பிற்பகல் இருதய நோய் வைத்திய நிபுணரான டாக்டர்,எஸ். நரேந்திரனின் வீட்டிற்குச் சென்ற அமைச்சர் ரோகித போகொல்லாகம (அண்மையில் ஐ.தே.க.விலிருந்து மாறியவர்)வின் மனைவி அவருடன் ஏற்பட்ட வாய்த்தகராறின் போது கத்தியால் குத்தியுள்ளார். குறிப்பிட்ட அமைச்சருக்கும் பிற பெண்ணொருவருக்குமிடையிலான காதல் தொடர்பின் எதிரொலியாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக பொரள்ளை பொலிசில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## போறூட் நிறுவன தொண்டர்களுக்கு போசாக்கு குறித்து பயிற்சி நெறி

போறூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லை.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் போறூட் தொண்டர்களுக்கான 9 நாட்கள் பயிற்சி கடந்த 10ஆம் திகதி காலை 9.00மணிக்கு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஆரம்பமானது. தாய்சேய் நலன் போசாக்கின் முக்கியத்துவம், சிசுக்களின் போசாக்கு, முன்பள்ளி சிறுவர்களின் போசாக்குக்குறை பாடு, கர்ப்பினி, பாலூட்டும் தாய் மார்களின் போசாக்குப் பிரச்சினை, குழந்தை வளர்ச்சியை கண் கானித்தலும், முக்கியத்துவமும், தாய்ப் பாலூட்டல் போன்ற தலைப்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## சுற்றுச்சூழல் அதிகார சபையின் அனுமதியுடன் மேல் கொத்மலை மின்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது

**-சிறிலங்கா மின்சாரசபை பொது முகாமையாளர்**

(கொழும்பு)

சிறிலங்காவில் சுற்றுலாச்சூழல் அதிகாரசபைகள் வழங்கிய அனு மதியுடனேயே மேல்கொத் மலைத் திட்டம் மற்றும் நுரைச்சோலை அனல் மின்நிலையத்திட்டம் என்பன மேற்கொள்ளப்படவுள் ளதாகமின்சாரசபையின் பொது முகாமையாளர் றஞ்சித் பெனான் டோ தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள நிலையில் சிறிலங்காவில் இரண்டே வழி முறைகள் உள்ளன. ஒன்று டீசல் முறையிலான மின் பிறப்பாக்கித் திட்டம் மற்றயவை நீர் மின்வலு அனல் மின்வலுத் திட்டங்கள் எனத் தெரிவித்த அவர்இவற்றில் மிகவும் சாத்தியமானதனையே மேற் கொள்ளவதாக தெரிவித்தார். இந்த நிலையில் இந்தத் திட்டங்கள் மூலம் அரசியல் இலாபம் பெறும் சந்திரிகாஎதிர்ப்புநடவடிக் கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித் துள்ளார். இதேவேளை மலைய கத்தில் மேற்கொள்ளப்படும் மேல் கொத்மலைத்திட்டத்திற்கு தமது கடுமையான எதிர்ப்பை காட்டவுள் ளதாக புதிய சனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ். தம்பையா தெரிவித்துள்ளார். இது குறித்து கருத்துவெளியிட்டுள்ள தேசிய இயற்கைவளங்களின் பாதுகாப்பிற்கான முன்னணியின் செயலாளர்சரத் பெனான்டோ சூழல் தொடர்பாகஇந்தஉயர் மின் வலுத் திட்டம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்எனக்கண்டித்துள்ளார் அத்துடன் மக்கள் இடப் பெயர்வு உட்பட்ட ஏனைய தாக்கங் களும் ஏற்படும்எனத்தெரிவித்துள்ளார்.



# புனித லூசியா ஆலய பொன்விழா



## சிறப்பிதழ் – 13.12.2004

## எமது இனம் பிறந்த வரலாறு

ஐரோப்பா கண்டத்தில் ஸ்பெயினும் போத்துக்கலும் சகோதர நாடுகளாவன. போத்துக்கலுக்கு நேர் கீழே மொறோக்கோ, அதற்கு மேலே இருக்கும் மத்தியதரைக்கடலில் "கனறி" எனும் ஒருவகைப் பறவை சர்வசாதாரணமாகக் காணப்படும் பல தீவுகள் உள்ளன. திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் ஸ்பானிய போத்துக்கேய கண்களுக்கு இத்தீவுகள் தென்பட்டதில் ஆச்சரியமில்லை. தங்கள் தேசிய வருவாய்க்கு உகந்ததாகவும் தங்களது தாய்நாட்டை அண்மித்தனவாக இருந்தாலும் இவர்களிற் பலர் இங்கு குடியேறத்தலைப்பட்டதன் காரணமாக "கனறியா" எனும் புதிய இனம் பிறந்தது. கி.பி. 1640ஆம் ஆண்டுவரை போத்துக்கல், ஸ்பெயினின் ஒருபகுதியாக இருந்தது. இக்காலத்தில் தான் ஸ்பானிய போத்துக்கேயர் தங்கள் வசமான நாடுகளிலெல்லாம் துறைமுகங்களையும், கோட்டைகளையும் கட்டி எழுப்பினர் என்பது சரித்திர பூர்வமான உண்மை. இக் கோட்டைகளைக் கட்டுவதற்காக அச்சமயம் கட்டடத் தொழிலில் சிறந்து விளங்கியவர்களும் தங்கள் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தவர்களுமான இக் கனறியரை மாலுமிகளெனும் போர்வையில் குடும்ப சகிதம் ஸ்பானிய அரசு அழைத்து வந்தது.

குடும்ப சகிதம் வந்தபடியாலும் ஸ்பானிய போதுக்கேயர் வசம் இந் நாடுகள் இருந்தபடியாலும் தென் ஆபிரிக்காவின் கேப்டவுண் (Cape Town) இந்தியாவின் கோவா (Goa) இலங்கையின் மன்னார் (Mannar) முதலிய நகரங்களில் இக்கனறியர்கள் சிலர் தங்கி விட்டனர். காலக்கதியில் இவர்கள் அந்நகர மக்களின் கலைக்கலாச்சாரங்களுக்கமைய கேப்டவுண் வாசிகள் வெள்ளை ஆபிரிக்கராவும், கோவாவாசியள் கொங்கணியராகவும் மன்னார் வாசிகள் தமிழராகவும் வாழத்தலைப்பட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் போர் வீரர்களாகவும், மாலுமிகளாகவும் வந்த போத்துக்கேயர் சிலர் இலங்கையின் மற்றைய பகுதிகளிலும் பிற இனத்தவர்களுடன் கலந்து தங்க' விட்டனர். என்பதற்குத் திருமலை, மட்டக்களப்பு, கொழும்பு, கண்டி,வஹக்கோட்டை என்னும் இடங்களில் வாழும் போதுக்கேயர் பிதிர் வழிகள் சான்றுகளாவர். இவர்கள் பறங்கியர் (Bergher) என்றும் எம்மை "கனறியர்" (Cannariar) என்றும் அழைக்கின்றனர். இந்தக் கனறியர்களான எம் மக்கள் தான் காலப்போக்கில் (கனடியர்) என மருவிய பெயரைப் பெற்றனர்.

மன்னார் கோட்டை கட்டும் போது எம்மவர் பள்ளி கொண்ட (துயில் கொண்ட) அதாவது தங்கியிருந்த இடம் ஒரு முனையாக இருந்தபடியால் எமது கிராமத்தின் பெயர் பள்ளி முனை (Pallimunai)யானது என்பது வரலாறு.

---

## வரலாறு காணும் புனிதலூசியா ஆலயமும் பள்ளிமுனைப் பங்கும்



மன்னார் பட்டினத்து எல்லையில் கிழக்கே அமைந்துள்ளது பள்ளி முனை என்னும் பழமை மிக்க கத்தோலிக்க கிராமம். இங்கு வசிப்பவர்கள். போத்துக்கீசர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். என்று கூறுவார்கள். அடம்பன் பங்கு மாத்தளை வார்க் கோட்டை என்னும் இடங்களைத்தவிர இலங்கையின் வேறு எந்த பாகத்திலும் இவர்களின் பரம்பரையினரைக் காண்பது அரிது. மேலை நாட்டு பாணியில் கண்ணைக் கவரும் வகையில் எழுப்பப்பட்டுள்ள புனித லூசியா ஆலயத்துக்கு பலசமயங்களையும் சேர்ந்த கண்நோயாளர்கள் வந்து குணமடைந்து செல்வதால் அதற்கு கண்ணேந்திமாத என்னும் பெயர் உண்டு.

ஒரு பங்கின் வரலாறு காலத்துக்கு காலம் தோன்றும், ஏற்ற இறக்கங்களைப் பொறுத்து உயர்வுகளையும் தாள்வுகளையும் ஏற்படுத்துகின்றது. எமது பங்கிலும் 1902 ஆம் ஆண்டு காலவாக்கில் .மாந்தைப் பங்குடன் ஏற்ட்ட்ட கருத்து வேற்றுமை எமது பங்கு வளர்ச்சியில் 50 ஆண்டு காலத்தை பின்னகர்த்தியது. எனினும் இறைவன் தமது மக்களை கைவிடவில்லை. பேரருட்திரு எச்.யு,லியன் ஆண்டகை அவர்களின் ஊக்கத்தாலும் அயராத முயற்சியாலும் சமரசம் ஏற்படுத்தப்பட்டு பங்குகள் மீண்டும் இணைந்து செயற்பட ஆரம்பித்தன.

பள்ளிமுனை ங்கு ஆரம்ப காலம் தொடக்கம் மன்னாருடன் இணைக்கப்பட்டிருந்தபடியால் மன்னார் பங்கின் வசதிக்கேற்பவே பள்ளிமுனைப்பங்கு பராமரிக்கப்பட்டுவந்தது. உதாரணமாக அதி வணக்கத்திற்குரிய F.N விஜயன அடிகளார் மன்னாரி லிருந்த காலத்தில் 1918 ஆம் வருடம் பள்ளிமுனை விவகார ங்களை கிரமமாகக் கவனித்து வந்தார் என்று மக்கள் கூறுவர். அப்போதுள்ள ஆலயத்தின் அரைகுறை வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது 1922இல் அருட்தந்தை S.J .அல் போண்ஸ் அடிகளார் இப்பங்கிற்கு நியமிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து அருட்தந்தை J.V. பறோன் அடிகளார் நீண்ட காலமாக இங்கு தொண் டாற்றி மக்களின் நன்மதிப் பையும்,அன்பையும் பெற்றார். இவரின் முயற்சியால் 1924 ஆம் ஆண்டில் 110'X42' பரப்பளவுள்ளதாக இவ்வாலயம் வடிவமைக் கப்பட்டது. இவரின் பின் பொறுப்பேற்ற அருட்தந்தை அல்போன்ஸ் அடிகளாரினதும், அருட்தந்தை விஜயன் அடிகளாரினதும் காலத்தில் பிரதான ஆலய மண்டபம் உயரமாக அமைத்து முடிக்கப்பட்டது. பல்வேறு தடைகளினாலும் டோம் அமைக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெறவில்லையாயினும் 1946 ஆம் ஆண்டு வணக்கத்திற்குரிய E.பொமிங்கோ அடிகளாரின் காலத்தில் டோம் அமைக்கப்பட்டது. 1954 இல் வணக்கத்திற்குரிய லூயிஸ் யோசப் அடிகளாரின் காலத்தில் முன்முகப்பு அழகானமுறையில் அமைக்கப்பட்டதுடன் கட்டுமான வேலைகள் பூர்த்தியடைந்தன. இப்பூர்த்தி நிகழ்வின் யூ பிலியே இவ்வாண்டு கொண்டாடப்படும் பொன்விழா ஆகும்.

ஆரம்ப கட்டடம் சுண்ணாம்பு



,கத்தாளை , மணல், கரும்புச் சாறு என்பவற்றின் கலவையால் முருகைக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.1965 ஆம் ஆண்டு இரண்டாம் வத்திக்கான் சங்கம், வழிபாட்டு முறைகளில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தது. அதற்கமைய குருவானவர் திருப்பலி மற்றும் திருச்சடங்குகளை பக்தர்களை நோக்கியவாறு நிறைவேற்ற வேண்டியிருந்தது. எக்காரணத்தினால் 1968 இல் வணக்கத்திற்குரிய ஜெபநேசன் அடிகளார் அழகும், கவர்ச்சியும் கொண்ட மரப் பீடம் உரிய முறையில் அமைக்கப்பட்டது.

நீண்டகாலமாக தொண்டாற்றிய குருமார்களில் வணக்கத்திற்குரிய சேப்கா அடிகளாரும் ஒருவர். இவர் பள்ளிமுனை தாழ்வுப்பாடு பங்குகளிடையே திருப்பணி நாட்களைப் பங்கிட்டு மாதத்தில் 20 நாட்களை பள்ளிமுனைக்கும் , பத்து நாட்களைத் தாழ்வுப்பாட்டிற்கும் ஒதுக்கினார். மக்களின் தேவைகளைக் கருதி வீடுகளைக்கட்டியும், சாலைகள் அமைத்தும், கிராமத்தை வளப்படுத்தினார். பங்குச் சபையும் கிராம மக்களும் அவருக்கு உறுதுணையாக நின்றனர். இவர் காலத்திலேயே ஆலய சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யும் முறை கொண்டுவரப்பட்டது. இவருக்குப்பின்வந்த வணக்கத்திற்குரிய சுவாம்பிள்ளை அடிகள் காலத்தில் பள்ளிமுனை தனிப்பங்காக ஆக்கப்பட்டது. பின்னர் வணக்கத்திற்குரிய சிங்கராயர் அடிகளார் காலத்தில் திருமறைக் கல்வி உருவாக்கப்பட்டது. இளைஞர், யுவதிகள் இலங்கை வானொலியில் பல சிறப்பான நிகழ்ச்சிகளைக் கொடுத்து ஆலயத்திற்கும் பங்கிற்கும் பெருமை சேர்த்தது. இவருடைய காலத்திலேயாகும்.

05 ஆம் திகதி மாலை இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி யூ,பிலி விழாவை முன்னிட்டு பள்ளிமுனைப்பங்கை தரிசித்து ஆசீர்வளங்கினார்.

# தீவிரவாதிகளுக்கெதிராக மியான்மாருடன் சேர்ந்து இராணுவ நடவடிக்கை எடுக்க இந்தியா விருப்பம்

(கொல்கத்தா)

**வடகிழக்கு மாநில தீவிரவாதிகளுக்கு எதிராக மியான்மர் இராணுவத்துடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கை எடுக்க இந்திய இராணுவம் தயாராக இருப்பதாக இராணுவத் துணைத் தலைமைத் தளபதி லெப்.ஜெனரல சந்தனுசவுத்ரி தெரிவித்தார்.இது தொடர்பாக மியான்மர் அரசின் ஒப்புதலுக்காக இந்திய இராணுவம் காத்திருப்பதாக அவர் கூறினார்.**

தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் இந்தியாவுக்கும் மியான்மாருக்கும் இடையே பொதுவான உடன்பாடு உள்ளது. மியான்மார் அரசு உரிமை படைத்த சுதந்திர நாடாகும். அரசு ஒப்புதல் இல்லாமல் மியான்மார் இராணுவத்துடன் சேர்ந்து நாம் நடவடிக்கையில் இறங்க முடியாது என்று சவுத்ரி தெரிவித்தார்.

மியான்மார் நாகா மலைப்பகுதி மிகவும் கடினமான ஒரு பகுதியாகும். இதில் நடவடிக்கை மேற்கொள்ள அதிக கால அவகாசம் பிடிக்கும். அத்துடன் அதிகமான எண்ணிக்கையில் இராணுவ வீரர்களையும் அந்த நடவடிக்கையில் ஈடுபடுத்திட வேண்டியிருக்கும். நாகா மற்றும் உல்பா தீவிரவாதிகளுக்கு எதிராக மியான்மார் இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக நான் பத்திரிகைகளில் செய்தி படித்தேன். இந்தியாவுக்கும் மியான்மாருக்கும் இடையே 2 ஆயிரத்து 326 கி.மீ நெடுக எல்லை உள்ளது என்றும் அவர் கூறினார்.

# தெலுங்கானா கட்சி விழாவிற்கு முதல்வருக்கு அழைப்பில்லை

(ஐதராபாத்)

ஆந்திராவில் காங்கிரஸ் மற்றும் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சிகள் இடையேயான மோதல் வலுக்கிறது. தெலுங்கானா கட்சி அலுவலக அடிக்கல் நாட்டு விழாவுக்கு முதல்வர் ராஜசேகர ரெட்டிக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை இது தொடர்பாக ஐதராபாத்தில் ஆந்திர காங்கிரஸ் தலைவர் கே.சவ்ராவ் கூறியதாவது; ராஷ்டிரிய சமிதி கட்சி ஐதராபாத்தில் புதிய அலுவலக கட்டடம் கட்டத் திட்டமிட்டுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொள்ள முதல்வர் ராஜசேகர ரெட்டிக்கு முறையாக அழைப்பு அனுப்பவில்லை. தெலுங்கானா கட்சி அலுவலகம் கட்டுவதற்கு மாநில அரசின் சார்பில் தான் நிலம் ஒதுக்கப்பட்டது. எனவே அடிக்கல் நாட்டு விழாவிற்கு முதல்வர் ராஜசேகர ரெட்டியை அழைத்திருக்க வேண்டும். ஆனால் அவருக்கு அழைப்பில்லை என்பதால் நானும் அந்த விழாவில் கலந்து கொள்ள மாட்டேன் இவ்வாறு கே.சவ்ராவ் கூறினார்.

# சுயநலமின்றி கட்சி நலனுக்கு பாடுபடுமாறு தொண்டர்களுக்கு அத்வானி ஆலோசனை

"பா.ஜ.கட்சியினர் சுயநலத்தைக் கைவிட்டு கட்சியின் நலனுக்காக பாடுபட வேண்டும்" என்று கட்சியின் தலைவர் அத்வானி அறிவுரை கூறியுள்ளார்.

வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த பா.ஜ.கட்சி தொண்டர்களின் கூட்டம் கவுகாத்தியில் நேற்று முன்தினம் நடந்தது. அசாமின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர் அருணாச்சல பிரதேசத்தின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த கட்சி எம்.எல்.ஏக்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இதில் அத்வானி பேசியதாவது;

வடகிழக்குப் பகுதியில் கட்சியை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல தொண்டர்களிடையே கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கம் இருக்க வேண்டும். கட்சி நிர்வாகிகள் சுயநலத்தோடு செயறபடாமல் கட்சியின் நலனுக்காக பாடுபட வேண்டும். வரும் 2009 ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலுக்கு முன் தொண்டர்கள் சுயமாக உள்ளாய்வு செய்துகொள்ள வேண்டும்.

வடகிழக்குப் பகுதியில் கட்சியின் வளர்ச்சி அடிமட்டத்தில் இருந்து வலுவாக அமைய வேண்டும். அதன் பின்னர் நமது கொள்கைகளுக்கு ஒத்துவரும் உள்ளூர் கட்சிகளுடன் தேர்தலுக்கு முன்போ, பின்போ கூட்டணி வைத்துக் கொள்ள முயற்சி மேற்கொள்ள வேண்டும். இதற்கு அருணாச்சல பிரதேசத்தை முன் உதாரணமாக வைத்துக் கொள்ளலாம். எனினும் அங்கு முதல்வர் ஜிகாங் அபாங் நள்ளிரவில் கட்சிமாறி ஆட்சியைப் பிடித்துக் கொண்டார். ஆனாலும் அங்கு பா.ஜ வுக்குக் கணிசமான தொகுதிகள் கிடைத்தன என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

# பா.ஜ.கட்சி ஆளும் மாநிலங்களை மன்மோகன்சிங் அரசு புறக்கணிக்கிறது

## - ஜஸ்வந்சிங் குற்றச்சாட்டு

((புதுடில்லி)

"மத்தியில் உள்ள ஐ.மு.கூட்டணி அரசு பா.ஜ. ஆளும் மாநிலங்களின் நலனில் போதிய அக்கறை காட்டவில்லை" என்று முன்னாள் மத்திய நிதியமைச்சரும் பா.ஜ தலைவர்களில் ஒருவருமான ஜஸ்வந்சிங் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பா.ஜ.ஆளும் மாநிலங்களின் நிதியமைச்சர்கள் கூட்டம் டில்லியில நேற்றுத் தொடங்கியது. இதில் பங்கேற்றுப் பேசிய ராஜ்யசபா எதிர்க்கட்சித் தலைவர் ஜஸ்வந்சிங் கூறியதாவது;

பா.ஜஆளும் மாநிலங்களின் நலனின் மத்தியில் உள்ள ஐ.மு. கூட்டணி அரசு போதிய அக்கறை காட்டவில்லை. எனவே மத்தியரசின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் உங்கள் சொந்த முயற்சியிலேயே பொருளாதார சீர் திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவது போன்ற கவர்ச்சித்திட்டங்களைக் கைவிடவேண்டும். சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகளில் முதலீட்டை அதிகரிக்க வேண்டும்.

முந்தைய தே.ஜ.கூட்டணி அரசு மேற்கொண்ட சீர் திருத்தங்களின் காரணமாகவே மத்தியில் உள்ள அதிகாரங்கள் மாநிலங்களுக்கு நியாயமாகப் போய்ச்சேர ஆரம்பித்தன. ஒவ்வொன்றுக்கும் மத்தியரசை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சீர் திருத்தங்களை சொந்த முயற்சியிலேயே மேற்கொள்ள வேண்டும். பெரியளவில் யோசனை செய்தல் வேண்டும். மாநிலங்கள் தங்கள் வசம் இருக்கும் நிலம், மின்சாரம், நீர், ஆதாரம் ஆகியவற்றை வைத்துக் கொண்டு பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டு பெரிய அளவிலான வளர்ச்சியைக் காண முடியும். அதற்கான முயற்சிகளை நீங்கள் தொடங்கவில்லை எனில் எந்த சீர்திருத்தங்களும் நடைபெறாது என்றார்.

# மனித உரிமைக்குழுக்களைப் பின்தொடர்ந்த பொலிசார் – மாவோயிஸ்ட்டுக்களுடன் மோதல்

ஆந்திராவில் பொலிசாருக்கும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் எந்த உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

ஆந்திரா மாநிலம் வாராங்கல்லிலிருந்து 30 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. கோரிசாலா குண்டா என்கிற கிராமம் இந்தக் கிராமத்திற்கு அருகில் உள்ள காட்டுப்பகுதியில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருப்பதாகவும் பலரிடம் அவர்கள் அச்சுறுத்தி பணம் பறிப்பதாகவும், பொலிசாருக்கு தகவல் கிடைத்தது. ஆனால் அவர்களது இருப்பிடத்தைச் சரியாக அடையாளம் காண முடியவில்லை. இதற்கிடையே மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த இரண்டு பேர் வாராங்கல் மாவட்ட மாவோயிஸ்ட் செயலாளரைச் சந்திக்க உள்ள தகவல் பொலிசாருக்குக் கிடைத்தது. இவர்களை ரகசியமாகப் பின்தொடர்ந்த பொலிசார் அவர்களின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்தனர். இதையடுத்து பொலிசார் மீது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் திடீர் துப்பாக்கி சூடு நடத்தினர். பொலிசாரும் திருப்பித் துப்பாக்கியால் சுட்டனர். இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இதன் பின் தீவிரவாதிகள் காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டனர். மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த இரண்டு பேரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

# 80 விமான நிலையங்களை அடுத்த ஆண்டில் நவீன மயமாக்க இந்திய அரசு திட்டம்

(புதுடில்லி)

இந்தியாவின் விமான நிலையங்களை நவீனமயமாக்குவதற்கென அடுத்த வருடம் திட்டம் ஒன்றை இந்தியா நடைமுறைப்படுத்தவுள்ளது.

நாட்டின் 80 விமான நிலையங்களை நவீன மயமாக்குவதற்கான இறுதிக் திட்டமொன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்படவுள்ளது. அடுத்த 3 ஆண்டுகளில் இதற்கான மொத்த செலவு 40 ஆயிரம் கோடி ரூபாவாக இருக்கும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.


# சாவு அறிவித்தல்

## முத்துக்குமாரு கதிரவேலு

*நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இல.527, 6ஆம் யூனிற் இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பர் என செல்லமாக அழைக்கப்படும் முத்துக்குமாரு கதிரவேலு 12.12.2004 நேற்று அதிகாலை காலமாகிவிட்டார். அன்னார் காலம்சென்றவர்களான முத்துக்குமாரு நாகாத்தைப்பிள்ளை ஆகியோரின் அன்புமகனும், காலம் சென்றவர்களான இராமநாதர் சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், பார்பதிப்பிள்ளையின் பாசமிகு கணவரும்,காமாட்சி (இராமநாதபுரம்),சரஸ்வதி (கனடா),சபாரத்தினம் (பாண்டியன்குளம்), காலஞ்சென்ற இராசரத்தினம் அருமைநாயகம் (பூ) (கனடா), பரமேஸ்வரி (பூபதி இராமநாதபுரம்), முத்து நாயகம் (ராசா இராமநாதபுரம்) சிவசுப்பிரமணியம் (சிவம் இராமநாதபுரம்), தர்மராசா (தவம் இராமநாதபுரம்), புஸ்பராணி (கனடா), சுந்தரலிங்கம் (சுவிஸ்), பத்மாவதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும்*

*நாகமணி (ஓய்வுபெற்ற அதிபர்),தர்மராசா(கனடா), தில்லைநாயகி (பாண்டியன்குளம்), புஸ்பலோஜினி (முத்தையன்கட்டு), விஜயலட்சுமி (கனடா), தேவராசா (இராமநாதபுரம்) திருவருள் (இராமநாதபுரம்), கலைவாணி (இராமநாதபுரம்),சிவறஞ்சினி (இராமநாதபுரம்), நாகராசா(கனடா),ஜோதி (சுவிஸ்),யோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,*

*காலம் சென்ற சங்கரப்பிள்ளை , காலம்சென்ற பசுபதிப்பிள்ளை காலஞ்சென்ற ஜயாத்தாப்பிள்ளை,பார்வதிப்பிள்ளை, சொர்ணம்மா (ஸ்கந்தபுரம்),காலம்சென்ற நல்லதம்பி,கமலம் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.*

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 13.12.2004 இன்று 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:-*
குடும்பத்தினர்.

*(5349)*



## தமிழீழ நுண்கலைக்கல்லூரி முல்லை மாவட்டம்

'தேடல்'அறிவோர் கூடல் ஆய்வரங்கு

நிகழ்த்துபவர் - திரு.புதுவை அன்பன் அவர்கள் (நாடக நெறியாளர்).

தலைப்பு - "1995 முதல் 2004 வரை தமிழீழ விடுதலைப் போராட்டமும், வீதி நாடகங்களும்."

காலம் - 15.12.2004 - புதன் - மாலை 4. 00 மணி

இடம் - புதுக்குடியிருப்பு, நுண்கலை அரங்கு.

அனைவரையும் அழைக்கின்றோம்.

தமிழீழ நுண்கலைக் கல்லூரியினர்.

*(சி.10957)*




# சாதனையை சமன் செய்தது மிகுந்த மகிழ்ச்சியாய் உள்ளது

கவாஸ்கரின் சாதனையை சமன் செய்தது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இது திருப்பு முனையை ஏற்படுத்தியது. சதம் அடித்ததன் மூலம் என்னை விமர்சித்தவர்களுக்கு சரியான பதிலடி கொடுத்து விட்டேன். என்னால் திறமையாக ஆட முடியும் என்ற நம்பிக்கை எற்பட்டு இருக்கிறது. வங்காளதேசத்துக்கு எதிராக நான் அடித்த சதத்தை மிகவும் சிறப்பாக கருதுகிறேன். ஏனென்றால் மோசமான காயத்திற்கு பிறகு விளையாட வந்து இந்த சதத்தை அடித்து இருக்கிறேன். இன்றுவரை நான் 100 சதவீதம் உடல் தகுதியுடன் இல்லை. வலி இருக்கத்தான் செய்கிறது. ஒரு பக்கம் விக்கெட் வீழ்ந்ததால் எனக்கு நெருக்கடி ஏற்பட்டது உண்மைதான். சில வாய்ப்புகளை வங்காளதேச வீரர்கள் தவற விட்டது அதிஷ்டம்தான். தொடர்ந்து சிறப்பாக விளையாடி இந்திய அணி வெற்றி பெற வேண்டும் என்பதே எனது விருப்பம் என்றார்.

# கோஹினூர் வைரத்தைவிட டெண்டுல்கர் விலைமதிப்பற்றவர்


–சுனில் கவாஸ்கர்

கோஹினூர் வைரத்தைவிட டெண்டுல்கர் விலை மதிப்பற்றவர். நம்மிடம் கோஹினூர் வைரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், சச்சின் உள்ளார்.

இந்தியர்களில் விலை மதிப்பற்றவர் அவர்தான் என இந்திய முன்னாள் தலைவர் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

50 சதங்கள் அடிக்கும் வரை டெண்டுல்கர் ஆட்டத்தை நிறுத்தக் கூடாது எனவும் கவாஸ்கர் கூறினார். இதேபோல முன்னாள் இந்திய வீரர்களும், பாகிஸ்தான் முன்னாள் வீரர்களும் டெண்டுல்கரைப் பாராட்டியுள்ளனர்.



கட்டார் தலைநகர் டோகாவில் அராபிய கால்பந்து சம்பியன் ஷிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஓமான் அணி 3-1 என்ற கோல் எண்ணிக்கையில் ஈராக்கை தோற்கடித்தது. ஓமான் வீரர் முபாரக்கிடமிருந்து (இடது) பந்தை தட்டிச்செல்ல முனைகிறார் ஈராக் வீரர் பாசிப் காதிஹ்.

# டாக்கா டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

# வெற்றியின் விளிம்பில் இந்திய அணி



இந்திய- பங்களாதேஷ் அணிகளுக்கிடையே டாக்கா பங்க பந்து விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றியின் விளிம்பில் உள்ளது..

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது 342 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிவரும் பங்களாதேஷ் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான நிலையில் இருப்பதுடன் இனிங்ஸ் தோல்வியை சந்திக்கும் நிலையில் உள்ளது.

முன்னதாக இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது 7 விக்கெட்டுக்களை இழந்து 348 ஓட்டங்களை பெற்றிருந்த இந்தியா 159 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்த டெண்டுல்கரின் இரட்டைச் சதம் சஹீர்கானின் அரைச் சதம் என்பவற்றின் உதவியுடன் 526 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

டெண்டுல்கர் ஆட்டமிழக்காது 248 ஓட்டங்களையும், சஹீர்கான் 75 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பைசியா, மொறட்சா, றஹ்மான், றபிக் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



டெண்டுல்கர், சஹீர் கான் ஜோடி கடைசி விக்கெட்டுக்காக 133 ஓட்டங்களைக் குவித்தது.

தொடர்ந்து இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் இர்பான் பதானின் பந்து வீச்சில் 36 ஓட்டங்களைப் பெறுவதற்குள் 5 விக்கெட்டுக்களை இழந்தது.

காலித் ஓமர்4, பாசார் 12, காலித் மசூத்5 ஓட்டங்களுடனும், முஹமது அஸ்ரப்புல், ராஜன் சலே ஓட்டமெதுவும் பெறாமலும் பதானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர்.


ஆறாவது விக்கெட் இணை பின் சுதாரித்துக்கொண்டு நின்று நிலைத்து ஆடிய போதும் கும்ளேயின் பந்துவீச்சில்




இக்பால் 54, முகமதுரபீக் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ரஹ்மான் 6 ஓட்டங்களுடன் ஹார்பஜனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

ஆட்டமிழக்காது றனா 50 ஓட்டங்களுடனும் பைசியா 17 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

போட்டி நிறைவடைவதற்கு இரண்டு நாள் மீதமுள்ள நிலையில் இரண்டு விக்கெட்டுக்கள் கைவசம் கொண்டுள்ள பங்களாதேஷ் இனிங்ஸ் தோல்வியை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.





# உலகக் குத்துச் சண்டையில் பங்கேற்கும் வில்லியம்சின் கனவைக் கலைத்தார் கிளிட்சுகோ

உலகக் கிண்ண குத்துச் சண்டைப் போட்டியில் பங்குபற்ற எண்ணிய டென்னி வில்லியம்ஸின் கனவை விட்டலி கிளிட்சுகோ முறியடித்து விட்டார். முதலாவது சுற்றில் அடுத்தடுத்து மூன்று முறை கிட்சுகோவின் தாக்குதலால் நிலைகுலைந்தார் வில்லி யம்ஸ். எனினும் நாலாவது முறை நடுவர் தலையிட்டார்.

எனினும் வில்லியம்ஸ் மனம் தளர்ந்து விடாமல் போட்டியிட்டார். எனினும் கிட்சுகோவின் வேகமான தாக்குதலை சமாளிக்க முடியாது போனது. இவ்வெற்றி குறித்து கிட்சுகோ கூறும் போது நான் வேகமான அடியை கொடுத்த போதும் அவர் பெரிய மனதுடன் பொறுத்துக் கொண்டார். அது வியப்பளித்ததாக இருந்தது என குறிப்பிட்ட அவர், அது இரும்பைப் போன்ற நாடி என்றார். எனினும் அவரது இரும்புக் கைக்கு அது தாக்குப் பிடிக்கவில்லை. இதுவரை பங்கேற்ற போட்டிகளில் இந்தப் போட்டியை மறக்க முடியாது என்று கூறிய அவர் மைக் டைசனின் தாக்குதலைப் போன்று இது இருக்கவில்லை என்றார்.

# பாகிஸ்தான் அணி பலம் பெற்றுள்ளது

## பொப்வூல்மர்

மேற்கு அவுஸ்திரேலிய அணியை 10 விக்கெட் வித்தியாசத்தில் தனது அணி வெற்றி கொண்டமையினால் அது பலம் பெற்றிருப்பதாக பாகிஸ்தான் பயிற்றுநர் பொப்வூல்மர் தெரிவித்துள்ளார்.

நாம் தோல்வியை சந்திப்போம் என்று கூற முடியாது ஏனெனில் தற்போது எமது அணி பலம் வாய்ந்ததாக இருக்கிறது என அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் கூறியுள்ளார்.

# ஆட்டமிழப்பு தொடர்பில் அவுஸ்.-பாக்.அணிகள் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் - பில்லி பௌடன்



சர்ச்சைக்குரிய வகையில் பிடிகளை எடுத்து ஆட்டமிழத்தலில் அவுஸ்திரேலிய், பாகிஸ்தான் அணிகள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என பிரபல கிரிக்கெட் நடுவர் பில்லி பௌடன் தெரிவித்துள்ளார்.

இன்னும் சில நாட்களில் இரு நாடுகளுக்குமிடையில் நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாகவுள்ள நிலையில், அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பிரச்சினைகள் தோன்றும்போது இரு தலைவர்களும் தம்மிடம் வந்து ஆலோசனை கேட்பது வரவேற்கக் கூடியதாக இருக்கும் என நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த நடுவர் பௌடன் கூறியுள்ளார்.




பௌடன் அவுஸ்திரேலியா சிறிலங்கா அணிகளுக்கிடையிலான போட்டியிலும், அவுஸ்திரேலிய நியூசிலாந்து போட்டிகளிலும் கடமையாற்றினார். அப்போட்டியில் கில்கிறிஸ்டின் பிடியால் ஆட்டமிழந்ததாக கருதப்பட்ட மக்மிலன் மைதானத்தைவிட்டு அகல மறுத்தார். இவ்வாறான நிலைகளில் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

# கிளி.மாவட்ட மாவீரர் வெற்றிக் கிண்ண கால்பந்து

# இறுதிப் போட்டிக்கு சென்மேரிஸ் அணி தகுதி

மாவீரர் வெற்றிக் கேடயத்துக்காக கிளி. மாவட்ட தகுதி பெற்ற அணிகளுக்கிடையே நடாத்தப்பெற்ற லீக் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில் பங்குபற்ற நாச்சிக்குடா சென்மேரிஸ் அணி தகுதிபெற்றுள்ளது.

இத் தொடரின் முதலாவது போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி, சென்மேரிஸ் அணியை 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தெரிவானது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் பரந்தன் இளைஞர் வட்டம் அணி, முழங்காவில் விநாயகர் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் உருத்திரபுரம் சந்திரோதயா அணி சோலை அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் நாச்சிக்குடா சென்மேரிஸ் அணியும், உருத்திரபுரம் சந்திரோதயா அணியும் தலா ஒரு கோல் போட்டன. அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட மேலதிக நேரத்திலும், இரு அணிகளும் கோல் எதுவும் போடவில்லை இதனைத் தொடர்ந்து சமநிலை உடைப்பின் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பெற்றது. இதில் சென்மேரிஸ் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இப் போட்டிக்கு நடுவர்களாக் க.புவனேந்திர ராசா, சிவனேசன், உபேந்திரன், பரஞ்சோதி, பத்மநாதன் ஆகியோர் கடமையாற்றினர்.


இறுதிப் போட்டியில் பரந்தன் இளைஞர் வட்டம்- வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணிகளுக்கிடையே நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் சென்மேரிஸ் அணி மோதும் (சோ.சு)

# மகளிர் ஒருநாள் போட்டி அவுஸ். அணிக்கு 14 ஓட்டவெற்றி

அவுஸ்திரேலிய பெண்கள் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.இந்திய -அவுஸ்திரேலியா அணிகள் இடையேயான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி மைசூரில் நேற்று முன்தினம் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 195 ஓட்டங்களை எடுத்தது. பின்னர் ஆடிய இந்திய அணி 9 விக்கெட் இழப்புக்கு 181 ஓட்டங்களை எடுத்தது.இதனால் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இப்போட்டித் தொடரில் அவுஸ்திரேலிய மகளிர் அணி 1-0 என்ற நிலையில் முன்னணியில் உள்ளது.



## சிந்தனைக்கு

எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 13-12-2004

தொலைபேசி / தொலைநகல் 021-2283948,060-2213244

மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## இன்றைய தீர்மானமல்ல!

சபாநாயகர் டபிள்யு. ஜெ.எம் லொக்கு பண்டாரவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவர ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். தமது இத்தகைய முடிவிற்கு ஐ.தே.கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அவர் தவறியுள்ளமையே காரணம் என அவர் கூறியுள்ளார்.

சபாநாயகர் டபிள்யு.ஜெ.எம் லொக்குபண்டார ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர் என்பதைத்தவிர அவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு ஐ.ம.சு.முன்னணிக்கு வேறு எந்தக் காரணியும் கிடையாது. அது அவர்களுக்குத் தேவையும் அற்றது. தி.மகேஸ்வரனின் நடவடிக்கைகளைக்கட்டுப்படுத்தத் தவறினார் என்பதற்காக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்போவதெனக் கூறுவதெல்லாம் கேலிக்குரியது எவரும் இதனை ஏற்றுக் கொள்ளப்போவதுமில்லை.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் கூச்சலும் குழப்பமும் நிலவுவதும் சபை நடவடிக்கைகளைத் தொடர முடியாமல் போவதும் தற்பொழுது வழக்கமாகிவிட்டதொன்று. இந்நிலையில் சபாநாயகர் தி.மகேஸ்வரனைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டார் தண்டிக்கத் தவறிவிட்டார். எனக் கூறுவது எல்லாம் வலுவற்றவையாகும்.

ஏனெனில் சிறிலங்கா பாராளுமன்றத்தில் இன்று யார் சபா நாயகரின் பேச்சிற்கும் , அறிவுறுத்தல்களுக்கும் கட்டுப்படுகின்றனர்? சபையில் எழுந்து கூக்குரல் இடுவதும், சபை நடுவில் இறங்கி அட்டகாசம் புரிவதும் சபாநாயகர் இருக்கையை நோக்கி ஓடுவதும் அதில் நின்று கூக்குரல் இடுவதும் வழமையான நடவடிக்கையாகிவிட்டது.

இதனைத் தனியாக எதிர்க்கட்சியினர் மட்டும் தான் செய்கின்றனர் என்பதல்ல. ஆளும் தரப்பினரும் இதனைச் செய்கின்றனர். அதிலும் குறிப்பாக தற்பொழுது எதிர்கட்சியைச் சேர்ந்தவர் சபாநாயகராக இருப்பதினால் ஆளும் கட்சியின் கூச்சலும் குழப்பமும் அதிகமாகவே உள்ளது. அதுமட்டுமன்றி ஆளும் கட்சியினர் எப்பொழுதாவது சபாநாயகரின் குரலுக்குக் கட்டுப்பட்டதுதான் உண்டா?

அடுத்ததாக சபாநாயகர் நடவடிக்கை எடுத்தல் என்பது தான் என்ன? மகேஸ்வரனைச் சபையை விட்டு வெளியேற்றுதல் அன்றி சபையை ஒத்திவைத்தல் என்பதைத் தவிர வேறு நடவடிக்கை எதைப் பற்றி ஆளும் தரப்பு கூறுகின்றது. ஏனெனில் வழமையாகச் சபை ஒத்திவைப்பதே நடைமுறையாகவுள்ளது. அத்தோடு தி.மகேஸ்வரன் குழப்பங்கள் விளைவித்தபோது தனியாக அவர்மட்டும் விளைவித்ததாக இல்லை. பல ஐ.தே.கட்சியினரும் சேர்ந்தல்லவா குழப்பம் செய்தனர்?

இவை ஒருபுறம் இருக்க தி.மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் விளைவித்த குழப்பத்தை விடவும் பெரிய குழப்பங்கள் எவையும் தற்போதைய ஆட்சிக் காலத்திலேயே நடைபெறவில்லையா? செங்கோல் ஆளும் தரப்பில் எடுத்துச் செல்லப்பட்டு ஒழித்து வைக்கப்படவில்லையா? ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்முறையில் இறங்கவில்லையா? பௌத்த பிக்குகளின் அங்கிகளில் பிடித்து இழுக்கவில்லையா? பிக்குகள் தாக்கப்படவில்லையா? அன்றி அவர்கள் காயமடையவில்லையா?

ஆனால் அன்றெல்லாம் அப்பாரளுமன்ற உறுப்பினர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கபட்டது? அன்றெல்லாம் கலகம் விளைவித்தவர்களை தண்டிக்கவேண்டும் என ஆளும் தரப்பு ஏன் கோரவில்லை? ஏனெனில் அன்று கலகம் விளைவித்தவர்கள் ஆளும் கட்சியினர். பெரும்பான்மை சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் அது மட்டுமல்ல அவ்வேளையில் ஆளும் தரப்பினர் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினர்.

ஆனால் தற்பொழுது மட்டும் தி.மகேஸ்வரன் செங்கோலை எடுத்துக் கொண்டோடினார். அவர் மீது சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகையினால் அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்போகிறோம் என ஆளும் தரப்பினர் அறிவிப்புச் செய்துள்ளனர். ஆனால் சபாநாயகர் டபிள்யு. ஜெ.எம்.லொக்கு பண்டாரவை பதவியில் இருந்து நீக்குவதென்பது. ஆளும் கட்சியின் தற்போதைய முடிவல்ல. அது ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவு தற்பொழுது அதற்கான காரணம் ஒன்று கூறப்பட்டுள்ளது என்பதே உண்மை.

சனாதிபதி சந்திரிகாவின் திட்டத்தின் படி முதலாவதாகப் பாராளுமன்றத்தில் சிறுபான்மை அரசாங்கம் என்ற நிலையை மாற்றி அறுதிப் பெரும்பான்மை பெறுதல். இதனை அவர் ஏதோ ஒரு வழி யில் நிறைவேற்றியுள்ளார். இரண்டாவதாக எதிர்க்கட்சி உறுப் பினரான சபாநாயகரைப் பதவியில் இருந்து நீக்குதல். அதற்கான ஏற்பாடுகளிலேயே அவர் தற்பொழுது மும்முரமாக ஈடுபட்டு வருகின் றார். அதுவே தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை முயற்சியாகும்.

இதிலும் வெற்றி பெற்றுவிட்டால் அடுத்த இலக்கு சனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கான நடவடிக்கையாகும். இதற்கு முன் கூறப்பட்ட இரண்டும் அதாவது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையும் சபாநாயகரும் தம்மைச் சார்ந்திருத்தல் அவசியமானதாகும். இரண்டுக்கும் அப்பால் சந்திரிகாவின் பதவி நீடிப்பிற்கு இடையூறாக வரத்தக்க நீதித்துறையை சரி செய்யும் ஆற்றலும் அவருக்குண்டு.

ஆகையினால் சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளு மன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றவுடனேயே எதிர்பார்க்கப்பட்ட தொன்றுதான், ஆயினும் பாராளுமன்றத்தில் உறுதியான பெரும்பான்மையைப் பெறச் சிலருக்கு வழங்கப்படவேண்டியவை வழங்கப்படாமல் இருந்தமை சற்றுத் தாமதத்தை ஏற்படுத்தியது ஆனால் தற்பொழுது அதற்கான நடவடிக்கைகள் முற்றுப் பெற்றுவிட்டன. ஆகையினால் சபாநாயகர் டபிள்யு. ஜெ.எம். லொக்கு பண்டார அதற்குரிய தருணம் வரும் போது நெருக்கடியை எதிர் நோக்கலாம்.

## அன்புப் பூக்கள் ஆயிரம் சொரிவோம்

வாய்மைக்கென்று
வாய்த்தவன் தமிழை
வண்மை செய்து
வளம்பல வாக்கித்
தூய்மை செய்து
துலக்கிய ஒருவன்
தொன்மை யிருந்தவை
புதுக்கிய கலைஞன்
தாய்மை முறுவல்
தனிப்பெருங் கருமை
தேயா முகத்தன்
தொலையாச் செயலன்
சேய்மை யிடத்தைத்
தெரிந்தவன் போனான்
திகைத்தோம் விழிகள்
புனற்பெருக் கானோம்

இலக்கணச் சதங்கை
இன்னொலி யிழந்து
இடிவிழுந் தன்னப்
புலப்பிடும் - சொக்கன்
இயற்றித் தந்த
இலக்கிய வீணை
இன்னரம் பறுத்து
இழமெனும் நாவின்
நலங்களால் மகிழ்ந்து
உலவிய காற்று
நலிந்துபோம் நாளும்
நடையொழிந் திருக்கும்
கலங்கிடா உருக்கின்
விழிகளும் உருக்கக்
காற்றிடை ஏறினன்
கண்டுளம் பதைத்தோம்

அரங்கிவன் வருகையில்
அணிபல கண்டது
ஆய்கலை யாவும்
அவன்துணை யிருந்தது
இரங்கிடும் இன்றிவன்
இலையெனும் உண்மை
இடியெனச் செவியில்
ஏறிடும் வகையால்
வரங்களாய் கல்விக்
கழகத்துப் பணிகள்
வழங்கிய சொக்கன்
வாழ்விற்றன் னெல்லை
தெரிந்து தான் போனா
னாயினும் எங்கள்
தோள்வலி தொலைந்த
துன்பம றிந்தோம்.

கற்றிந் துதவிய
கருணையன் பிரிவு
வெற்றிடம் அதனை
நிரப்பிடும் தகைமை
உற்றவர் எவரோ?
மூன்றுநற் றமிழின்
தத்துவம் விளங்கும்
தாய்மடிந் தென்ன
நற்றவன் பிரிந்தான்
நாற்றிசை மறைய
வற்றிய குளமாய்
வாயெடுத் தூற்றிப்
பெற்றிகள் பெருமைப்



பேச்சொடு கைகள்
உச்சியிற் குவித்தோம்
வேறெது செய்தோம்?

உலகப் பெருமை
பிறத்தலும் முடிவும்
உணர்வோ மதனால்
ஊறிடும் விழிநீர்
அகலத் துடைத்து
அருந்தவன் தாளில்
அன்புப் பூக்கள்
ஆயிரம் சொரிவோம்.

தமிழீழக் கல்விக் கழகம்,
தமிழீழ தமிழ் வளர்ச்சிக் கழகம்,
தமிழீழக் கல்விமேம்பாட்டுப் பேரவை.

## பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கான

# தகுதியை திஸாநாயக்க இழக்கவில்லை

### கே.என். சொக்ஸி தெரிவிப்பு

கொழும்பு உச்சநீதிமன்ற 5 நீதியரசர்களால் நீதிமன்ற அவமதிப்பிற்காக குற்றம் சுமத்தப்பட்டதனால் அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தனது பாராளுமன்ற உறுப பினர் பதவியை இழந்து விடவில்லை. என ஐ.தே.க சட்டத்தரணி கே.என் சொக்ஸி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். அவர் பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக ஒரு உறுப்பினராக இருப்பதற்கு தனது தகுதியை இழக்கவில்லை. எனவும் குறிப்பிட்ட அவர் திஸாநாயக்க தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழப்பதற்கு மூன்று ஆதாரங்கள் முன் வைக்கப்படவேண்டும். ஆனால் இச் சம்பவத்தில் இரு அடிப் படைக் கொள்கைகள் அல்லது ஆதாரங்கள் முன் வைக்கப்படவில்லை. ஒரு பாராளுமன்ற உறுப் பினர் தனது ஆசனத்தை இழப்பதானால் அவர் அரசியலமைப்புச் சட்ட 89ஆம் விதியின் படி ஏதாவது தகுதியிழப்புக்கு உட்பட வேண்டும. இவ் விதியின் படி பாராளுமன்ற உறுப்பினர் ஒரு நீதிமன்றால் குற்றம் சாட்டப்பட்டு 6மாத காலத்திற்கு மேலாக சிறை வைக்கப்பட்டிருந்தமைக்காக, இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட அவமதிப்புத் தண்டனைக்குச் சிறை வைக்கப்பட்டிருந்தமைக்காக தனது பாராளுமன்ற உறுப்புரிமையை இழக்கலாம். இவ் வண்ணம் பாராளுமன்ற உறுப்புரிமையை இழப்பதற்கு மூன்று ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். முதலாவது ஒரு அவமதிப்புக்கான குற்றம் ஏதாவது சுமத்தப்பட்டிருக்க வேண்டும். இவ் அலட்சியம் ஒரு நீதிமன்ற அவமதிப்பா? அரசியல் அமைப்புச் சட்ட 105 விதிப்படி அலட்சியம் ஒரு தண்டனைக் குரியதாக உச்ச நீதிமன்றம் தீர்க்கலாம். இது ஒரு அவமதிப்பாகத் தெளிவுபடுத்தப் படவில்லை. இரண்டாவது தேவையாக 89 (d) சட்ட மூல விதிப்படி 6 மாதத்திற்கு மேலாக சிறைக்கு உட்பட்டு இருக்க வேண்டும். இது எஸ்.பி திஸா நாயக்கா விடயத்திற்கு திருப்திகரமானது. 3ன்றாவது தேவை உறுப்பினர் ஒரு அவமதிப்புக் குற்றத்தின் தண்டனைக்காக குறைந்தது 2 வருடத்திற்கு மேல் சிறை வைக்கப்பட்டிருக்க வேண்டும். 89(d) சட்ட மூலப்படி இரு ஆதாரங்கள் எஸ்.பி திஸா நாயக்க விடயத்தில் திருப்திகரமாக இல்லை. எனவே அவர் தொடர்ந்து பாராளுமன்ற உறுப் பினராக இருப்பதற்குத் தகுதி உடையவர். தண்டனைக்குரிய என்ற சொல்லின் கருத்து தண்டிக் கப்பட வேண்டும் என்பதே. இன்றும் இவ் விடயத்தில் தண்டனைக் குரிய என்ற 89 (d) சட்ட மூல விதிப்படி ஆகக் குறைந்தது இரு வருடம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொழும்பு கைக்குண்டு தாக்குதலுக்கு ஜாதிக ஹெல உறுமய கண்டனம்

கொழும்பில் நேற்று முன்தினம் இசை நிழகழ்வின் போது இடம் பெற்ற கைக் குண்டுத்தாக்குதலை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தினதேரர் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தள்ளார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்;

இச் சம்பவத்திற்கும் எமது கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை யெனவும், நாட்டில் பெரு மதிப்பையும், பௌத்தர்களின் பெரு மதிப்பையும் பாதித்துள்ள இந்த பயங்கரவாதச் செயலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் என தெரிவித்துள்ளார். இக் கலை நிகழ்வை நடத்தாமல் பிற்போட்டிருக்கலாம் என்ற நிலைப்பாட்டில் எமக்கு உடன் பாடில்லை. ஆனால் நேற்று முன் தினம் இடம் பெற்ற போராட்டத்தில் எமது கட்சி பங்கு கொள்ள வில்லை. விழா ஏற்பாட்டாளர்க ளுக்கும், உண்ணா விரதம் இருந்த சில பிக்குமார்களுக் குமிடையில் இணக்கப்பாடு ஒன்றை ஏற் படுத்தவே நான் இதில் தலையிட்டேன். இதேவேளை ஆர்ப் பாட்டக்காரர்களில் இருந்த சில தீய சக்திகளால் எமது கட்சிக்கு அபகீர்த்தியை ஏற் படுத்தும் நோக்கத்துடன் இக்குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளதென மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இசை நிகழ்ச்சியின் போது இடம் பெற்ற குண்டுத்தாக்குதல் சம்பவம் இந் நாட்டிற்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளதென நடிகர் கமல் அத்தராட்சி தெரிவித்துள்ளார் தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

இந்திய கலைஞர்களின் வருகையின் போது இத்தகைய எதிர்ப்புபொன்றை தெரிவிப்பது பொருத்தமானதல்ல. பௌத்த மதம் இந்தியாவில் இருந்தே வந்தது. நாங்கள் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு பரிகாரமாக எதைத்தான் கொடுத்தோம் என வினா எழுப்பியுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா கருத்து வெளியிடுகையில் இச் சம்பவத்திற்கு பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியே உள்ளதென்றும் இந்த விடயம் தொடர்பாக ஆணைக் குழு ஒன்று நியமிக்கப் பட்டு விசாரணைகள் நடத்தப்படவேண்டும் மென்றும் குறிப்பிட்டார்.

# எஸ்.பி.திஸா நாயக்கவுக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சுயாதீனமானதாகும்

## –சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது சுயாதீனமான தீர்ப்பாகும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். நேற்று மாத்தறையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், அண்மையில் பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் நடந்துகொண்ட விதம் மிகவும் மோசமான நிலையாகும். பாராளுமன்றத்தின் மூலம் உயர் நீதிமன்றத்தின் தீாப்பை மாற்ற முடியும் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையானது ஏற்றுக்கொள்ள முடியாததாகும், இந்த நியாயத்தை கூறும் புாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல் பீரிஸ் உண்மையில் பேராசிரியரா? என்பது ஆராயப்படவேண்டும் எனவே ஜி.எல்.பீரிஸின் பேராசிரியர் பட்டம் உண்மையானதா? அல்லது போலியானதா? என்பதை கண்டறியுமாறு நான் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

அதேநேரம் தம்மை சட்டத்தரணி எனக்கூறிக்கொள்ளும் மாத்தறையின் பாராளுமன்ற உறுப்பினரான மகிந்த விஜயசேகர ஒரு மோசடிக்காரர். அவர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றவேண்டும் எனக்கேட்பது கேலிக்கூத்தானதாகும்.

அதனைவிட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், ரணில்விக்கிரமசிங்க சிரேஷ்ட சட்டவல்லுனரைப்போல நடந்துகொள்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்டுப்படுத்திகொள்ள முடியவில்லை. ஆயினும் எம்மால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியும்.

நேற்றுமுன்தினம் இந்தியக் கலைஞரான சாருக்கான் உட்பட்ட குழுவினர் நடத்திய இசைநிகழ்ச்சியின் போது இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கு ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் கோட்டை ஆசனத்தின் ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளராக உள்ள மோசடிக்காரரும், திருடனுமான ஒருவரே இதற்கு காரணமாகும். என சனாதிபதி குற்றம் சுமத்தினார். ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டில் குண்டுத்தாக்குதலை நடத்துகிறது. நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசிய கட்சியும் தமது அரசாங்கமும் ஒருமித்த இணக்கத்தை கொண்டுள்ளன. எனவே இதனை மேம்படுத்திக்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (32)

# அமைச்சர் அனுராவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல்

## -ஐ.தே.க.பா.உ.ஒருவர் மனு

சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க நீதிமன்றத்தை அவமதித்ததாகவும், அவரை உடன் விசாரணை செய்யுமாறும் கோரும் மனு ஒன்றை ஐ.தே.கட்சியின் குருணாகல் மாவட்ட எம்.பி. ஜோன்சன் பெர்னாண்டோ உயர் நீதிமன்றில் தாக்கல் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த மனுவின்படி அனுரா கடந்த மாதம் பொலனறுவையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் ஆற்றிய உரை 16ஆம் திகதி திவயின என்ற பத்திரிகையில் வெளிவந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பற்றி கேட்டபோது அனுரா மறுப்புத் தெரிவிக்கவில்லை என சண்டே லீடர் தெரிவித்துள்ளது. அவரின் பேச்சில் திருத்தம் மேற்கொண்டு பின்னர் 10ஆம் திகதி டிசம்பரில் உரை வெளியாகியுள்ளது.

அனுரா தனது உரையில், திஸாநாயக்க சிறைக்கு அனுப்பப் படுவார். சிறையிலேயே அவர் புதுவருடத்தைக் கொண்டாடுவார் என்று குறிப்பிட்டார்.

இதன்படி நீதிமன்றம் தீர்ப்பு வழங்க முன்பு தனிநபர் ஒருவர் தீர்ப்பு கூறுவது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்றும், இதனைநோக்கும் போது அனுராவுக்கும் நீதிமன்றத்துக்கும் ரகசிய தொடர்பு.இருப்பதாகத் தெரிகிறது என்றும் ஜோன்சன் பெர்னாண்டோ தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

### வீரவணக்கம்....

தாளையடி வடமராட்சி கிழக்கு யாழ்ப்பாணம்.த.மு:- இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, முல்லை என்ற போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை செலுத்துகின்றனர்.


### அரசின்...

சனாதிபதி மீண்டும் அரசியலில் மூன்றாவது முறையாகவும் நிலைத்திருக்கவே இந்த அவசர முயற்சி மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ள அந்தக் கட்சி சனாதிபதி தேர்தல் கால நியமப்படி அடுத்த வருட இறுதியில் நடத்தப்படல் வேண்டும் எனக் கோரியுள்ளது. (32)

### லெப்...

மளவு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் தளபதிகள், போராளிகளிகள், காவல்துறை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பெரும்பாலானோரின் வீணக்க நிகழ்வைத் தொடர்ந்து வித்துடல் பவனியாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் முகாமலையை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டு மாலை 6.00 மணியளவில் குருநகர், பாசையூர், நாவந்துறை ஆகிய இடங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் இன்று காலை ஏழு மணிக்கு யாழ். தீவகப் பகுதியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. பின் மதியம் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை வலிகாமம் பகுதியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 5.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை குடத்தனைப் பகுதியில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் நாளை காலை 7.00 மணி தொடக்கம் 9.30 மணி வரை வல்வெட்டித்துறையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் அங்கிருந்து பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, முற்பகல் 11.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை அங்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 1.00 மணிக்கு முகமாலைக்கு மீண்டும் எடுத்து வரப்பட்டு பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை பூநகரிப் பகுதியிலும், பிற்பகல் 7.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரை முழங்காவிலிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 15ஆம் திகதி காலை 7.00 மணி தொடக்கம் 8.00 மணி வரை செம்மலையிலும், 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை முல்லைத் தீவிலும், 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 02.00 மணி வரை புதுக்குடியிருப்பிலும் பிற்பகல் 4.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை கிளிநொச்சியிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் இரவு 8.00 மணிக்கு மீண்டும் அவரது சொந்த இருப்பிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 16ஆம் திகதி 1.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து இராணுவ மரியாதைகளுடன் வித்துடல் எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 3.30 மணி வரை தாளையடி அந்தோனியார் கோவில் முன்றலில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் 5.30 மணிக்கு பூரண இராணுவ மரியாதையுடன் உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல் புனித விதை குழியில் விதைக்கப்படும். (ச. தீ)



கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்

## -உக்ரேனிலிருந்து இலங்கை வந்த-

# இரு ஏ.என்.32 விமானங்கள் ரஷ்யப்படையால் தரையிறக்கம்

உக்ரேனில் இருந்து இலங்கை நோக்கி வந்து கொண்டிருந்த இரண்டு ஏ.என்.32 ரக விமானங்கள் கடந்த 8ஆம் திகதி ரஷ்ய விமானப் படையினர் தரையிறக்கியுள்ளனர்.இந்த விமானங்கள் இரண்டிலும் நான்கு இலங்கை விமான ஓட்டிகள் இருந்ததாக கூறப்ப டுகிறது. உக்ரேன் நாட்டில் இநத இரண்டு விமானங்களும் சமீ பத்தில் திருத்தப்பட்டுள்ளதாகவும் அத்து மீறி ரஷ்ய எல்லையில் நுழைந்தமையால் இந்த இரண்டு விமானங்களும் ரஷ்ய விமானப்படையினரால் தரையிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### வாழைச்...

மடைந்தது. இரண்டாவது குண்டுத்தாக்குதல் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதன்போது மீராவோடையை சேர்ந்த ஒருவரின் வீடு சேதமடைந்துள்ளது. (32)

### மட்டு....

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் இந்த வெதுப்பகம் அமைந்துள்ளது. 25 மீற்றர் தொலைவில் பொலிஸ், இராணுவ, கூட்டு வீதித் தடையொன்றும் உள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவந்துள்ளதாவது: இனந்தெரியாத நபர் ஒருவர் வாடிக்கையாளர்கள் போல் வந்து இக் குண்டை வீசி விட்டுச் சென்றுள்ளார். கடும் மழை காரணமாக வெதுப்பகத்திற்கு உள்ளே வாடிக்கையாளர்கள் குறைவாகவே காணப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக வெதுப்பக உரிமையாளர் எஸ்.நந்தகுமார் மட்டக்களப்பு பொலிசில் புகார் செய்துள்ளார்.

### ஹொங்ஹொங்...

21ஆம் திகதி நாடு திரும்பும் அவர் அதன் பின்னர் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை வெளிநாட்டுப்பயணங்களை ஒத்திவைத்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. தற்சமயம் அவர் மேற்கொள்ளும் விஜயத்தின் போது பல தலைவர்களுடனான சந்திப்புகள் திட்டமிடப்பட்டுள்ளன.

### எம்.எஸ் சுப்புலட்சுமி காலமானார்



பிரபல கர்நாடக இசைப்பாடகி எம்.எஸ் சுப்புலட்சுமி அவர்கள் வயது 88) நேற்று முன்தினம் காலமானார். இசைக்குயில் என புகழப்பட்ட இவருக்கு இந்திய அரசியல் பிரமுகர்களும் மக்களும் அஞ் சலி செலுத்திவருகின்றனர்.

### விடுதலைப்...

விமான நிலையம் வரை விமானப்படையினர் கொண்டு சென்று விடுவதென்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அவர்கள் தரைமார்க்கமாகவே செல்லவேண்டும் எனவும் விமானப் படை முடிவெடுத்துள்ளது.

இதன் பிரகாரம் இலங்கைக்கு வரும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்கெய்ம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்கு விமானப்படை உலங்குவானூர்தி சேவையை வழங்கப்போவதில்லை என்றும் பலாலி விமான நிலையம் வரை சூல்கெய்ம் விமானத்தில் கொண்டு சென்று விடப்படுவார் என்றும், யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கு அவர் தரைமார்க்கமாகவே செல்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தின் பின்னணியில் ஜே. வி.பி உள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### கொழும்பு....

பாளரும் தாஜ் விடுதி பணியாளராகிய பெண்ணும் பலியானதாக தெரியவந்துள்ளன. இதே வேளை இந்தியக் கலைஞர்கள் அனைவரும் கொழும்பிலிருந்து நாடு திரும்பியுள்ளனர். மேலும் நேற்று முன்தினம் கொழும்பில் இசை நிகழ்ச்சியின் போது இடம்பெற்ற சம்பவம் குறித்து சிறிலங்கா அதிகாரிகள் மேற்கொண்டுள்ள விசாரணைகளின் முடிவை எதிர்பார்த்திருப்பதாக இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இத்தகைய பயங்கரவாத செயலை இந்திய அரசு வன்மையாகக் கண்டிக்கிறது. இதன் போது உயிரிழந்தவர்களுக்காகவும், காயமடைந்தவர்களுக்காகவும் இந்தியா அனுதாபத்தைத் தெரிவிக்கிறதென தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை முன்னாள் கிரிக்கெட் வீரர் ரவிசாஸ்திரியின் மனைவி தவிர வேறு எந்த இந்தியப் பிரஜையும் இக்குண்டு வெடிப்பில் காயமடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### நிலாவெளி....

னார்.

திருமலை-குச்சாவெளி பிரதான வீதியில் 9ஆம் கட்டையில் விடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனை அமைந்துள்ளது. அண்மையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 18 எம்பிக்கள் திருமலை வந்திருந்தபோது இவ்வலுவகம் திறந்து வைக்கப்பட்டது. நவம்பவர் 2ஆம் திகதி இவ்வலுவகத்தில் பறந்து கொண்டிருந்த விடுதலைப்புலிகள் தமிழீழத் தேசியக் கொடி சில விஷமிகளால் அகற்றப்பட்டது. அதன் பின்னா மாவீரர் நாள் கொண்டாட்ட காலத்தில் நிலாவெளியில் அமைக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் அலங்கார வளைவுகள் விசமிகளால் அகற்றப்பட்டு எரிக்கப்பட்டன. இப் போது விடுதலைப் புலிகளின் அலுவலகத்தை எரித்துவிட முயற்சி எடுக்கப் பட்டுள்ளது என்றும் தூயவன் தெரிவித்தார். எரிக்க வந்தவர்கள் விட்டுச் சென்ற தடயப் பொருட்கள், அவர் கள் திரும்பிச் சென்ற பாதையில் காணப்பட்டதால், சைக்கிள் தடயங்களைப் பின் தொடர்ந்து சென்றபோது அவை அருகில் கடற்படை முகாமைச் சென்றடைந்தனர் என்றும் தூயவன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். எரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு அருகில் உள்ள ட்ரான்ஸ் போர்மரின் பியூஸ் அகற்றப்பட்டிருந்தது என்றும் தூயவன் மேலும் தெரிவித்தார். எமது தலைவர் அரசுடன் செய்து கொண்டுள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ள எமக்கு இவ்வாறான நெருக்கடிகளைக் கொடுப்பது, சமாதான முயற்சிக்கு ஊக்கம் தருவதாக அமையாது என்றும் அவர் கூறினார். இதுபோன்ற அசம்பாவிதங்கள் இடம்பெறாமலிருக்க விழிப்புக்குழு ஒன்றை அமைத்திருப்பதாகவும் தூயவன் தெரிவித்தார். (25)


### மேடையிலிருந்து....

ஷாருக்கான் உட்பட்ட கலைஞாகள் மேடையில் இசை நிகழ்ச்சி நடத்திக்கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நிகழ்ச்சி இடம்பெற்றுக் கொண்டிருந்த போது பார்வையாளர் முன்வரிசையில் இருந்தே குண்டு வீச்சு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பலத்த சோதனைகளுக்கு மத்தியிலேயே நிகழ்ச்சிக்கு பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் இந்தக் குண்டு எவ்வாறு எடுத்துச்செல்லப் பட்டது என்பது குறித்துப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்திய கலைஞர்களுக்கு எதிராக நடத்தப் பட்ட இந்த தாக்குதலானது இலங்கை இந்திய உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும், இலங்கைக்கான குறிப்பாக இந்திய உல்லாசப் பயணிகளின் வருகையில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் அர்ஜுனரணதுங்க தெரிவித்துள்ளார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உள் நெருப்பின் கனலே!

# உயிர் சொரிந்த மலையயே!



மண்மடியில்
06-12-1936

மனக்குழியில்
11-12-2004

கடற்புலிகளின் மூத்த உறுப்பினரும்

கடற்தொழிலாளர் சங்க சமாசங்களின் மேலாளருமான

## லெப் கேணல் மறவன் மாஸ்ரர்

[எலியாஸ்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ் –தாளையடி – வடமராட்சி கிழக்கு]

மூப்புக்கள் நெருங்காத
வல்வையின் நெருப்பே
முது தமிழர் கலை வளர்த்த
ஆளுமையின் பொறுப்பே
ஐம்பதிலே பயிற்றுவிக்கும்
கடமைவிட்டுக்களம் வந்தாய்
அதற்கு முன்பு சிங்களத்தின்
படைக்கருவி பறித்தெடுத்தாய்
இந்தியப்படைகளுக்கு
நெருப்பாக நாமிருந்தோம் – அந்த
நெருப்பினது சுவாலைகளை
இறக்கைகளால் காத்திருந்தாய்
மக்கள் படை வளர்த்து
கடற்புலிக்கு அணி சேர்த்தாய்
துணைப்படையின் முள்ளெலும்பாய்
துடிப்புடனே உயிர்கலந்தாய்
மண்டைதீவுப்பகைவெல்ல
மான்தீவின் பகை கொல்ல
பூநகரிக்கூட்டுத்தளம்
மீதொருநாள் தீமூட்ட
நீருந்து விசைப்படகு
கட்டிவந்து பலம் வளர்க்க
ஓயாத அலைகளாகி திசையெல்லாம்
நாம் படர
ஒன்றிரண்டாய் சமர்க்களங்கள்
வெற்றிகொண்டு ஊர் செல்ல
மக்கள் படையோடு
மண் பெருமை நீகாத்தாய்
சுண்டிக்குள நீரேரி
அலையாகிக் கிடந்தாய்
கடற்தொழிலின் மகத்துவத்தைக்
கட்டி வளர்த்த ஆசான்–நீ
சமாசங்களின் வேராகித்
தேசவளம் பெருக்கவைத்தாய்
நோய் மறந்து தேசமெல்லாம்
தெம்பாகத் திரிந்தாய்
எழுபதிலே துயில் நிலத்துக்
குழியினுள்ளே விதைந்தாய்
காலக்கதைஎழுதும்
தூரிகையின் உயிர் நீ– இன்று
உனக்காகக் கவி வரைந்தோம்
உள் நெருப்பின் கனல் நீ!
அலை வீசும் கடலெல்லாம்
உன் கதையைப்பாடும்
வலை வீசும் கரங்கள் வந்து
உன் கனவைத் தாங்கும்
மழைபொழியும் நேரத்தை
மனிதர் சொல்ல முடியாது.
மறவன் உந்தன் வலிவு சொல்ல
எம் மொழியால் முடியாது.

SEA TIGERS

விடுதலைப்புலிகளின்
கடற்புலிகள்.